# கைத்தொழிலும் இயந்திர யுகமும்.

இன்று உலகத்தில் கைத்தொழில் இயந்திரமயமாகவே மாறிக்கொண்டிருக்கிறது. இன்று தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் தொழிலாளர்கள் அதிகப் பொருள்களை உற்பத்தி செய்ய முடிவதோடு ஜகத்தின் பொருளாதார நிலைமையும் வெகு தூரம் அதிகரித்திருக்கின்றது. கூறுதலே பொருத்தம். தேவைக்குத் தகுந்த வகையில் சாமான்களின் பெருக்கத்திற்கு இயந்திர யுகமே மற்றோர் காரணமாகும். முன் காலத்தில் ஆடம்பர சாமான்களாய் நினைத்தவைகளெல்லாம் இப்பொழுது சுலபமாகவும், அதிகமாகவும் கிடைக்கும்படி செய்ததும் அதுவேயாகும். இயந்திரங்களின் பெருக்கத்தால் தேசத்தின் வர்த்தகம் பல துறைகளில் முன்னேற்றமடைந்திருப்பதோடு பொருளாதார நிலையும் விருத்தியடைந்திருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையும் எழும்பியிருக்கிறதென்பதை எவரும் மறுக்க முடியாது. இயந்திர யுகத்தினால், வேலை கிடைக்காதிருக்கும் ஏற்பட்டுள்ள பெரும் பிரச்னை இப்பொழுது புதிதாகத் தோன்றியதன்று.

இயந்திரங்கள் அதிகரிக்க அதிகரிக்க சாமான்களைச் செய்யவேண்டிய தொழிலாளர்களின் தொகையும் குறைந்து கொண்டே வருகிறதென்பதைக் கீழே கண்டவைகளிலிருந்து நன்கு தெரிந்து கொள்ளலாம்.

கைத்தொழில் சம்பந்தமாக 1925-ல் எடுத்த கணக்கின்படி 1914-ல் 100 தொழிலாளர்கள் செய்த சாமான்களை 1925-ல் 71 தொழிலாளர்கள் 100-க்கு 9-மணி குறைந்த நேரத்தில் தயாரித்து விடுகின்றனர். சென்ற 25 வருஷங்களாய இயந்திர சகாயம் எவ்விதம் விருத்தியடைந்துகொண்டு வந்திருக்கிறதோ அதே மாதிரி இன்னும் 25 வருஷங்கள் விருத்தியடைந்து கொண்டு வருமாகில் இப்பொழுது 70 பேர்கள் செய்துவரும் வேலையை 45 பேரைக்கொண்டு செய்துவிட முடியுமென்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் இயந்திர யுகத்தின் வேகம் முந்திய இருபத்தைந்து வருஷங்களில் அதிகமாகவே இருக்குமென்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. எனவே 1914-ல் 100 தொழிலாளர்கள் இயந்திரத்தின் மூலம் எவ்வளவு சாமான்களைத் தயாரித்தார்களோ அதே சாமான்களை 1950-ல் 45 தொழிலாளர்கள் குறைந்த நேரத்தில் தயாரித்துவிடுவார்கள்.

மேலே குறித்த எண்கள் எல்லாத் தொழில்களிலிருந்தும் சேர்த்துக் கணக்கிட்ட சராசரி எண்ணாகும். சில தொழிற்சாலைகளில் இன்னும் குறைந்த தொழிலாளர்களைக் கொண்டே வேலை செய்துவிடக்கூடிய சௌகரியமிருக்கலாம். மற்றுஞ் சிலவற்றிலோ அதைவிட அதிகமாயிருக்கலாம். இப்பொழுதுள்ள தொழிற்சாலைகளில் மோட்டார் தொழிற்சாலையில் தான் மிகக் குறைந்த தொழிலாளரைக்கொண்டு அதிக மோட்டார்களை உற்பத்திசெய்து வருகின்றனர். 1914-ல் 100 மோட்டார்களைச் செய்ய எவ்வளவு தொழிலாளர்கள் வேண்டியிருந்ததோ, அதில் மூன்றிலொரு பங்கு தொழிலாளர்களைக்கொண்டு இப்பொழுது தயாரித்துவிடுகின்றனர். 1914-ல் வாங்கிய மோட்டார் களிருந்ததைவிட இப்பொழுது அதில் விலையுயர்ந்த சாமான்களையெல்லாம் வைத்திருக்கின்றனரோயெனினும், மோட்டார்களின் விலை மாத்திரம் அதிக நயமாகத் தானிருக்கிறது.

எனவே, இப்பொழுதுள்ள நிலைமையை ஆராய்ந்தால் 1914-ல் இருந்ததைவிட 100க்கு 29 பேர் வீதம் தொழிலாளர்கள் குறைவாக இருந்தாலே போதுமான தென்பது தெற்றென விளங்குகிறது. இதிலிருந்து 100-க்கு 29 வீதம் குறைவுபடும் அத்தொழிலாளர்களின் நிலைமை என்னுவது என்ற பிரச்னை எழுகின்றது. தற்கால மேற்கூறிய பிரச்னைக்கு சுலபத்தில் பதில் கூறிவிடலாம். 1914-ல் 100 தொழிலாளர்கள் தயாரித்த சாமான்களை 1925-ல் 71 பேர் செய்து வருகிறார்களென்பது உண்மையே. ஆனால் ஒரு முக்கிய விஷயத்தை நாம் மறந்து விடக்கூடாது. முன்பு செலவழித்த சாமான்களைவிட இப்பொழுது எவ்வளவோ சாமான்கள் செலவாவதால் வேலையில்லாது போகும் மற்ற 29 தொழிலாளர்களுக்கும் வேலை கிடைப்பதோடு 15 லக்ஷம் அதிகத் தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்கிறது. அமெரிக்காவிலுள்ள தொழிற்சாலைகளில் 1925-ல் 63 ஆயிரம் கோடி டாலர்கள் பெறுமானமுள்ள சாமான்களைத் தயாரித்திருக்கின்றனர். ஆனால் 1914 லிலோ 2,400 கோடி டாலர்கள் பெறுமானமுள்ள சாமான்களைத்தான் தயாரித்திருக்கிறார்கள். 1914-ல் 222½ லக்ஷம் குதிரை வேகமுள்ள இயந்திர சக்தியைக் கொண்டு வேலை நடத்தியிருக்க 1925-ல் 360 லக்ஷம் குதிரை வேகமுள்ள சக்தியை உபயோகித்திருக்கிறார்கள்.

மேலும் வர்த்தகத்திலுள்ள மற்றோர் முக்கியாம்சத்தையும் நாம் மறந்துவிடக்கூடாது. உற்பத்தி அதிகரிக்க அதிகரிக்க தேவையும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. புதுத் தொழிற்சாலைகள் தோன்றத் தோன்ற ஜனங்களின் தேவையும் அதிகரித்துக்கொண்டே வருவதோடு அதிகத் தொழிலாளர்களும் வேண்டியிருக்கிறது. ரேடியோ இயந்திரங்களையும், மோட்டார்களையும் தயாரிக்கும் தொழிற்சாலைகளையே புதிதாகப்பலம்பெற்று வருபவைகளாகும். இவற்றை உற்று நோக்கினாலே அத்தொழிற்சாலைகளில் புதிதாக எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்ய இடமளித்திருக்கிறதென்பதும், மற்ற தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு எவ்வளவு தூரம் அதனால் நன்மை ஏற்படுகிறதென்பதும் நன்கு விளங்கும். ரேடியோ, மோட்டார் முதலியவைகளால் மற்றும் பல தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்கிறது. மோட்டாருக்கு வேண்டிய சில்லரைச் சாமான்களை தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும் பல தொழிலாளருக்கு வேலை ஏற்படுவதோடு ரேடியோ இயந்திரங்கள் தயாரிப்பதால் ஆகாசவசனி நிலயங்களிலும் கணக்கற்ற தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கிறது. இவ்வேலைகளெல்லாம் மோட்டார்களாலும், ரேடியோக்களாலும் புதிதாக ஏற்பட்டவைகளென்பதை எவராவது மறுக்க முடியுமா?

சிறக, இந்திரங்களின் பெருக்கத்தால் தொழிலாளரின் பொருளாதார நிலைமையும் அதிக தூரம் விருத்தியடைந்திருக்கிறது. திடீரென்று தற்காலிகமாக வேலையில்லாக் கஷ்டம் ஏற்பட்டபோதிலும் தொழிலாளருக்கு அதிக சம்பளம் கிடைக்கிறது. 1914-ல் இருந்ததைவிட இப்பொழுது தொழிலாளர்கள் சம்பளம் மூன்றிலொரு பங்கு அதிகரித்திருக்கிறது. ஆகையால் அவர்களுடைய வாழ்க்கையை நடத்த எவ்வளவு வேண்டுமோ அதைவிட அதிகமாகச் சம்பாதித்து சுகமாகவே வாழ்க்கையை நடத்திவருகிறார்கள். ஆகையால் தற்காலிகமாக ஏற்படும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் சமாளித்துக்கொள்ளும் சக்தி, இயந்திர யுகம் செய்திருக்கும் முன்னேற்றத்தால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இயந்திர யுகம் வளர்ச்சியடையு முன்பு, தொழிலாளர் ஒருநாள் செய்த வேலையையே மறுநாளும் செய்துகொண்டு நூதனமில்லா அசட்டு வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது அவர்களுடைய தொழிலும் உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறது. ஆகையால் சாமான்கள் உற்பத்தியை அதிகரித்து தொழிலாளர்களுக்குள் ஏற்படக்கூடிய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முயல வேண்டியது தொழிற்சாலை நிர்வாகிகளின் முதற் கடமையாகும்.

—"அமெரிக்கன் எக்ஸ்பேர்ட்டர்"

# முடையின் பொருள்.

("ஊழிய"னில் தி ஜ. ரோ எழுதியது)

பணமுடை, பணமுடை என்று எல்லாரும் கூறுகிறார்கள். தினம் ஒன்றுக்கு நாலணா கூலிவாங்கிப் பிழைக்கும் ஏழைக்கும் பணமுடை! மாதம் ஒன்றுக்கு நாற்பது ஐம்பது சம்பளத்துக்கு உழைக்கும் ஒருவருக்கும் பணமுடை! மூந்நூறு நானூறு மாதச் சம்பளம் பெறும் தனவானுக்கும் பணமுடை! பண்ணைக்கு உழைக்கும் குடியானவனுக்கும் பணமுடை! ஏராளமான நிலத்துக்கு உடையவரான குடித்தனக்காரருக்கும் பணமுடை! பெருத்த வியாபாரம் புரியும் வர்த்தகருக்கும்—பல ஆள் வைத்து வேலைவாங்கும் முதலாளிக்கும் பணமுடை! அவர்களிடம் உழைக்கும் கூலிக்காரருக்கும் பணமுடை! இது வியப்பாகத் தோன்றவில்லையா? பணமுடை, பணம் கிடைக்காமையில் இருக்கிறதா? அல்லது அது வேறு எதிலேனுமிருக்கிறதா? பணத்தட்டு எல்லாருக்கும் எப்படி உண்டாகிறது? இது சிந்திக்கத்தக்கதாகும்.

மாதச் சம்பளம் இருபது பவுன்; மாதச் செலவு இருபது பவுன் ஆறு பென்ஸ்: மிருக்கது துன்பம். மாதச் சம்பளம் இருபது பவுன்; மாதச் செலவு பத்தொன்பது பவுன், பத்தொன்பது ஷில்லிங், ஆறு பென்ஸ்: மிதந்தது இன்பம். இவ்வாறு ஓர் கதாசிரியர் கூறுகிறார். இது உண்மையேயாகும். வரவுக்கு மிஞ்சிய செலவுதான் பணமுடைக்கும், துன்பத்திற்கும், கடனுக்கும் அநேகமாகக் காரணமாகும். இது எவருக்கும் தெரிந்த உண்மைதான். எனினும், ஒவ்வொருவரும் அநேகமாக வரவுக்கு மிஞ்சிய செலவையே செய்கிறார்கள். இதனால் தான் பொதுவான பண நெருக்கடி அனேகமாக ஏற்படுகிறது. பொருளாதார அறிஞர்கள் தங்கள் பாஷையில் பணமுடைக்கு வேறு வியாக்கியானங்கள் செய்யக்கூடும். அவற்றையும் தெரிந்து கூர்ந்து நோக்கினால், அவற்றின் பொருளும் அடிப்படையில் இதுவாகவே காணப்படும். கிடைக்கும் பொருளுக்கு மேல் செலவைச் செய்தல், வியர்த்தமான வேலையைச் செய்தல், தேவையில் போகங்களை அனுபவித்தல், பிறர் இரத்தத்தை உறிஞ்சியாயினும் தான் மட்டில் முடிந்த இன்பங்களையெல்லாம் அனுபவிக்க ஆசைப்படுதல்—இவை யாவும் பொதுவில் வரவுக்கு மிஞ்சிய அதாவது வரவினை ஒட்டியதல்லாத செலவில் முடிபவையேயாகும். இவைதாம் பொருள் நெருக்கடிக்குக் காரணங்களாகும். பொருள் நிபுணர்களும் இதனை மறுக்க முடியாது.

பணம் என்பது என்ன என்பதை நோக்குவோம். பணம் என்பது பண்டமாற்றுக்காகத் தோன்றியதாகக் கூறுகிறார்கள். ஆனால் இக்காலத்தில் அது, முதலாகத் திரட்டி வைக்கப் பெற்ற ஆசைக்குவியலாக இருக்கிறது. பணம் என்பது ஒரு முதல். அதனைக்கொண்டு பல ஆசைகளைப் பூர்த்திசெய்து கொள்ளலாம். எனவே, முதலாக்கி வைக்கப்பெற்ற ஆசையின் குவியல் என்று அதனைக் கூறுவது ஓரளவு பொருத்துவதுதானே? எனவே பணம் ஆசையைப் பூர்த்திசெய்விக்கும் ஓர் மூலதனக் குவியலாக இருக்கின்றது. இன்பங்களையும் சுகங்களையும் நுகர்வதோ மனிதர்களின் தாரதம்யங்களையும், இயற்கை ஏற்றத் தாழ்வுகளையும் ஒட்டிப் பகிர்ந்துகொண்ட உழைப்பின் பலனாக இருக்கவேண்டும். எனவே ஆசை நிறைவேற்ற, முதலான பணம் உண்மை உழைப்பினையும் அதற்குரிய இன்ப உரிமைகளையும் அளந்து பகிர்ந்தளிக்கும் கருவியாக இருக்க வேண்டும். இந்த முறையில் அது பயன் படுத்தப் பெறுகிறதா? இதுதான் கேள்வி.

உழைப்பிற்கு ஒரு விளைவு உண்டு—நஷ்டத்தையும் சேதத்தையும் ஒதுக்கிக் கணக்கிட்டாலும் மிகுந்து நிற்கும் விளைவு நிச்சயம் உண்டு. உழைப்பிற்கேற்ப விளைவைப் பங்கிட்டுக் கொடுத்தல் பணத்தின் அலுவல். அவ்விதம் நடந்துவராமல், பணம் கண்டவாறு பயன்படுத்தப் பெறும் பொழுதுதான் பண நெருக்கடி உண்டாகின்றது.

பணம் பற்றித் தொல்லைகளும் துன்பங்களும் உண்டாகின்றன. எனவே பணமுடைக்குத் தனி மனிதன் மட்டிலும் பொறுப்பானவனல்ல; அவனைத் தவறாக வழங்கும் ஜனசமூகம் முழுவதுமே பொறுப்பாகும். எனவேதான், டால்ஸ்டாய் போன்ற பெரியார்கள், பணத்தையே—செயற்கை வேற்றுமைகளை உண்டாக்கும் கருவிகளுள் ஒன்றான பணத்தையே தொலைத்துவிடவேண்டும் என்று வெருண்டார்கள். ஆனால், ஜன சமூக வாழ்விலிருக்கும் ஊழல்களுக்காகப் பணத்தைக் குறை கூறிப் பயனென்ன?

மனிதருக்குள் இயற்கை வேற்றுமைகள் சிலவுண்டு; செயற்கை வேற்றுமைகள் பல தோன்றியிருக்கின்றன. ஒருவன் நொண்டியாகப் பிறக்கிறான்; இன்னொருவன் எல்லா அங்கங்களும் நிறைவுகொண்டு பிறக்கிறான். ஒருவன் பிறவியில் குருடன்; இன்னொருவன் முழு ஒளியும் நிறைந்த அழகுக் கண்ணைப் பிறக்கின்றான். ஒருவனுக்கு இயல்பாகவே புத்திசாலித்தனம் நிறைந்து ஒளிர்கிறது; இன்னொருவனுக்கு அது எவ்வளவும் உண்டாவதில்லை. இவை போன்றனவெல்லாம் இயற்கை வேற்றுமைகள் என்ற தலைப்பில் அடங்கும். இவைபோன்றன தவிர்ந்த யாவும் செயற்கை வேற்றுமைகள் என்பதன் கீழ்வரும். பல சாதங்களும், பல சம்பிரதாயங்களும் செயற்கை வேற்றுமைகளைக் கற்பிப்பவையாக இருக்கின்றன. பணமும் இப்பொழுது செயற்கை வேற்றுமைகளை உண்டாக்கும் கருவிகளுள் ஒன்றாகவே வழங்கிவருகின்றது. செயற்கை வேற்றுமைகள் தோன்றும் பொழுதுதான் துன்பங்களும் சங்கடங்களும் விளைகின்றன.

எந்த நிலையிலும் இயற்கை வேற்றுமைகளைத் தவிர்க்க முடியாதுஎன்பதை எவருக்கும் உருசிப்பித்துக் கூறவேண்டியதில்லை. செயற்கை வேற்றுமைகளைத்தான் மனிதர்களில் சிறந்த பெரியோர் அழித்துவிட ஆவலிக்கிறார்கள். ஆனால், எந்தக்காலத்திலும், எந்த நிலையிலும் எதாயது சில செயற்கை வேற்றுமைகள் நிலவியே நிற்கும் என்பது இதுவரை மனித அனுபவத்தைக் கொண்டு கட்டவேண்டிய முடிவாக இருக்கின்றது. எனவே வாழ்வை நடத்தும் பொழுது, செயற்கை வேற்றுமைகளையும் இயற்கை வேற்றுமைகளையும் கணக்கிட்டுக் கொண்டு அதில் ஓர் இசையை ஏற்படுத்திக் கொள்வதுதான் வாழ்வின் தந்திரம்—தத்துவம்—நுட்பம்.

நிற்க, பணமுடைக்கான அடிப்படைக் காரணங்களை நோக்குவோம். அனேகர் தங்கள் உழைப்பினாலோ அன்றி வேறு விதத்தாலோ கிடைக்கும் பொருளுக்குமேல் செலவைச் செய்ய முந்துகிறார்கள். இதனால் தொல்லையும் துன்பமும் ஏற்பட்டுவிடுகின்றன. செலவுக்குத் திண்டாடுகிறார்கள். முடைதட்டு என்று சொல்லிக்கொண்டே, மேலும் கடன் வாங்கியேனும், செலவளவைக் குறையாது செலவழித்துக் கொண்டே செல்கிறார்கள். ஏன் என்று கேட்டால், யாவும் அவசியச் செலவாகவே இருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். செலவை இவர்கள் விட முயன்றாலும், அது இவர்களை விடேனென்கிறது. ஏதனால்? ஒவ்வொருவருக்கும் ஒரு வாழ்க்கை அந்தஸ்து உண்டு. அந்த அந்தஸ்து வரவுக்கு மிஞ்சிய செலவாக இருக்கின்றது. அந்த அந்தஸ்துக் கிசைய நடவாவிட்டால், சமூகத்தின் கண்களிலே தாழ்ந்துபோக வேண்டி வருமோ என்ற பயம். இந் நிலையில் தான் திண்டாட்டம் தோன்றுகிறது. எனவே, தவறான வாழ்க்கை அந்தஸ்துப் பித்துத் தொலையவேண்டும். அதற்குத் தனி மனிதரின் உழைப்புத்தான்—துணிவுதான் தேவையாகும். எளிய வாழ்வை வாழ்க்கை அந்தஸ் தாக்கிக் கொள்ள ஒவ்வொருவரும் முயல வேண்டும். அப்பொழுது வாழ்க்கை அந்தஸ்துத் தொல்லை தீர்ந்துவிடும்.

பயனற்ற-விளைவற்ற வீணான வேலையை இயற்றுவதில் மனிதனது செயற்திறன் ஏராளமாகச் செலவழிகின்றது. மனிதர்கள் அணிகளும் பணிகளும் ஏராளமாகத் தரித்துக் கொள்ளு

(இதன் தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பிராமண சகோதரர்களுக்கு
## உபதேசம்.

சகோதரர்களே!

நம் இந்திய மக்களில் தாங்கள் ஒரு முற்போக்குள்ள வகுப்பினராகக் கல்வியில் முன்னேற்றமடைந்து ஜனவீதாசாரப்படிக்கு அதிகமாகத் தங்கள் வகுப்பினர்களே சகல உத்தியோக துறைகளிலும் நுழைந்து கொண்டதோடு, தாங்களல்லாத மற்ற வகுப்பினர்களையும் முன்னேற்ற மடைய விடாமல் சமயோசிதமாக வசியப்படுத்தித் தங்கள் சுயநல நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்கிறீர்கள்.

மக்கள் பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை; அவனவன் ஆசார ஒழுக்கத்துக் கேற்றபடி உயர்வாகிறான் என்று அறிந்தவர்களாயும், உயர்வானவன் சகல மனிதனையும் தெய்வத்தன்மை பொருந்தியவனென்று நினைக்கக் கடமைப்பட்டிருக்கிறானென்றும் உண்மை தெரிந்தவர்களாயும், எங்கும் நிறைந்த பரம்பொருள் சகலரிடமும் பிரகாசித்துக் கொண்டிருக்கிற இரகசியம் நன்கு தெரிந்தவர்களாயுமுள்ள நீங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாக நியாயமறியாத ஜனங்களை ஏமாற்றமான வார்த்தைகளால் ஏமாற்றி, துவேஷமூட்டி, பகைமூட்டி சாதிக் கூத்துப் பார்த்துத் தாங்கள் மட்டும் இன்பமடைந்து வருகிறீர்கள்.

பிறர் மனதை துன்பமடைய விட்டு தாங்கள்மட்டும் இன்பமடைவது மகா துரோகமாகுமே என்பதையுணருங்கள். இப்படியுள்ள துரோகத்துக்கானாகி சுமக்கும் பாவ மூட்டையைக் கீழேயிறக்க முற்படுங்கள். தாங்கள் செய்து வரும் நியாய விரோதச் செயல்களெல்லாம் கண்டு இறைவன் வெகுண்டு கொண்டிருக்கிறார். உங்கள் வாலைப்பற்றி மற்ற வகுப்புப் பேதையர்களும் பலர் அலைகின்றனர். அவர்களுக்கும் நற்புத்தி யாம் புகட்டுவதோடு தாங்களும் நியாய வழிவந்து அவர்களுக்குப் போதித்துத் திருத்துங்கள். உங்களால்தான் அவர்கள் உண்மை தவறினவர்களாவர் என்பதையறியுங்கள். உங்கள் பாவத்தை நீக்கவும், நம் தேசத்தைமுற்போக்கடையச் செய்யவும் அந்தரங்க சுத்தியோடு சகல மனிதர்களையும் சமத்துவமாக நினைத்து இணங்கி வாழ முற்படுங்கள். அதுதான் ஈசன் அருளுக்குப் பாத்திரமாகும் வழி.

மீ. சி. சுந்தரநாடார்,
போடிநாயக்கனூர்.

## பாண்டிய குல க்ஷத்திரிய
## சைவசமய சங்கம்,
## திருமங்கலம்

### முதல் வருடப்
### பூர்த்தி விழா.

விபவ ௵ வைகாசி மீ 24௳ (6-6-28) ஷை சங்கத்தின் முதல் வருடப் பூர்த்தி வைபவம் ஸ்ரீ பத்திரகாளி மாரியம்மன் தேவஸ்தானம் முன்பாக அமைத்திருந்த சிங்காரப் பந்தலில் இரவு $7\frac{1}{2}$ மணிக்கு நடைபெறுவதாக ஏற்பாடு செய்திருந்ததில் சில அசந்தர்ப்பங்களை முன்னிட்டு பெரிய கடை வீதி குமரன் கோவில் முன்பாக சுமார் $10\frac{1}{2}$ மணிக்கு ஆரம்பமாயிற்று. அவ்வமயம் சுமார் 400 நண்பர்கள் வரை விஜயம் செய்திருந்தனர். காரைக்குடி, சிவனடியார் திருக்கூட்டத் தலைவரும், "குமரன்" பத்திராசிரியருமான திருவாளர். சொ. முருகப்பசெட்டியார் அவர்களையும் திருவாளர். பிச்சப்பா சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்களையும் மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்துவரப் பெற்றது. பிறகு சங்கக்காரியதரிசியவர்கள் திரு. முருகப்பசெட்டியார் அவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி பிரேரபிக்க திரு. க. ம. க. கந்தஸ்வாமி நாடார் அவர்கள் ஆமோதிக்க பலத்த கரகோஷத்தினிடையே அக்கிராசனர் அமர்ந்தார். பின்பு திரு. சிங்காரவேல் பாண்டியரவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பெற்று, அக்கிராசனரவர்கள் "ஜீவகாருண்யம்" என்பதைப் பற்றியும், திருவாளர். பிச்சப்பா சுப்பிரமணியஞ்செட்டியார் அவர்கள் "கொல்லாமை" என்பதைப்பற்றியும் சுமார் 2—மணி நேரம் வெகு உருக்கமாகப் பேசினார்கள். பிறகு திரு. சிவ. ப. சிவசுந்தரநாடார் அவர்கள் அக்கிராசனர் அவர்களுக்குக் கதரில் தயாரித்திருந்தவரவேற்புஉபசாரப் பத்திரத்தை வாசித்துக் கொடுத்தார்கள். கடைசியாக சந்தனம், தாம்பூலம் வழங்கப் பெற்று வந்தனோபசாரத்துடன் சபை இனிது கலைந்தது.

பெ. அ. ஆபத்துக்காத்தநாடார்,
காரியதரிசி.

## சரஸ்வதி க்ஷத்திரிய
## வித்தியாசாலை, முக்கூடல்.

### நிர்வாக விபரம்.

ஷை வித்தியாசாலை 1923-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. பின்வரும் கணக்கிலிருந்து ஷை வித்தியாசாலையின் விருத்தியை அறிந்துகொள்ளலாம்:—

1923-24-கிராண்ட் ரூ 52—12—0; வருடப்பரீக்ஷைமாணவர் 129. 1924-25 கிராண்ட் ரூ 972—4—0; வருடப் பரீக்ஷை மாணவர் 136. 1925-26 கிராண்ட் ரூ 1052-12-0; வருடப் பரீக்ஷை மாணவர் 137. 1926—27 கிராண்ட் ரூ 1297-12-0; வருடப் பரீக்ஷை மாணவர் 140. 1927-28 கிராண்ட் ரூ 1483-12-0; வருடப் பரீக்ஷை மாணவர் 141.

வித்தியாசாலையின் நிர்வாகத்திற்கென்று 1000 பீடிகளுக்கு சுற்றுக்கூலி 4 அணா இருந்ததை 3 அணா 4 பை வீதம் வாங்கிக்கொள்ள பீடி சுற்றும் ஏழை ஜனங்கள் மனதார சம்மதித்ததினால் பார்சல் 1-க்கு ரூ 1-8-0 கிடைத்ததிலிருந்து ரூ 1 வித்தியாசாலைக்கு மகமையாக பீடி வியாபாரிகள்செலுத்தி வருகிறதென்றும், எவ்வித காரணத்தையிட்டும் இந்த மகமையை யாரும் நிறுத்தக்கூடாதென்றும் ஆதியில் ரிஜிஸ்ட்டர் தஸ்தாவேஜுமூலமாய் ஒப்பந்தம். அப்படியிருக்க கடந்த $1\frac{1}{2}$ வருஷ காலத்திற்கதிகமாய் அனேகர் கூலியிலிருந்து ஏற்பட்ட மகமையைச் செலுத்தாமல் வீண்சாக்குப் போக்குகளைச் சொல்லுகிறார்கள். ஆனால் மகமை பாக்கி எப்படியும் வசூல் செய்யப்படும் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவேண்டும். இந்த எல்லாக் கஷ்டத்தின் மத்தியிலும் "எடுத்த காரியத்தைக் கைவிடேல்" என்ற நீதி வாக்கியத்திற்கிசைய வித்தியாசாலையின்நிர்வாகத்தை மாதம் 1-க்குசுமார் ரூ 300 கரஸ் பாண்டென்ட்டாகிய யான் நடத்தி வருகிறேன். வித்தியாசாலையின் சட்டங்களுக்கு விரோதமாகவாவது ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்ட மகமை தஸ்தாவேஜின் நிபந்தனைகளுக்கு விரோதமாகவாவது நான் நடந்திருப்பதில்லை என்பதை 2-12-27ல் ஸ்ரீமான் அரி. அ. செண்பகநாடாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்ற கமிட்டித் தீர்மானத்தை வாசித்தால் திட்டமாய்த் துலங்கும். ஸ்ரீமான் தம்புகலெக்ட்டர் முன்பாக 2மீ தவணை போட்டு ஸ்ரீமான் அரி. அ. செண்பக நாடாரவர்கள் பேருக்குக் கொடுக்கப்பட்ட அக்ரிமெண்ட் பிரகாரம் எவ்விதத் தீர்மானமும் ஸ்ரீமான் அரி. அ. செண்பக நாடாரவர்களால் நடக்கவில்லை.

வித்தியாசாலைக்கு ஸ்ரீமான் க. சரவணப் பெருமாள் நாடாரவர்கள் நிலம் இனாமாயளித்திருக்கிறார்கள். அவர்களே நிர்வாக சபையின் தலைவராக நியமிக்கப்பட்டு, நாளிது வரை அவர்கள் தலைமை வகிப்பதிலிருந்து விளைந்துவரும் பயனைச் சீர்தூக்கின், ஷை ஸ்தானத்திற்கு ஏற்றவர் அவர்களைத் தவிர வேறே யாரும் இலர் என்பது "உள்ளங்கை நெல்லிக் கனி" போல் பிரத்தியக்ஷமாகிறது.

விபரம் இந்தகைத்திருக்க, சின்னாட்களுக்கு முன்னர் "குடியரசு," "திராவிடன்" பத்திரிகைகளில் ராமலக்ஷ்மியால் ஷை ஸ்கூலைப்பற்றி முரண்பட்ட விஷயங்கள் அள்ளிக்கொட்டப்பட்டிருந்தன. இவ்விபரம் கண்டு அவ்வம்மையார் தெளிவு கொள்ளட்டும்.

த. பி. சோக்கலால்.

## பெண்களின்
## பெருமை.

உலகிற் சிறந்தனவாகக் கருதப்படும், இயங்கும் பொருட்கள் எல்லாவற்றிலும் உயர்வாயும் இல்வாழ்வானுக்கு இன்றியமையாத தாகவுமிருக்கும் பெண்களின் பெருமையை என் சிற்றறிவிற்கெட்டியவாறு சிறிது வரைகிறேன். பெண்களைப்பற்றி நம் நாட்டிலும், பிறநாடுகளிலும் எவ்வளவோ புகழ்ந்தெழுதிவைத்துப் போயிருக்கின்றனர் ஆன்றோர்கள். புகழ்தற்குரித்தான நம் மங்கையர்கள் பொதுவாகக் கல்வியும், சிறப்பாகச் சமய சம்பந்தமான கல்வியுமில்லாமல் தவிக்கின்றனர். இவர்களின் அரிய குணங்கள், ஊன்றிப்பார்த்த சில அறிவாளிகட்குமட்டுமே தெரிந்திருந்தது. இக்காலத்திலோ பெண்களை அடிமைகள் போல நடத்திவருகிறார்கள். "எந்தக் காலம் வரை பெண்கள் துன்புற்றிருக்கிறார்களோ அந்தக்காலம் வரை உலகம் இருளாகவே யிருக்கும். மக்களோ ஊக்கமற்றவர்களாயிருப்பார்கள்" என்று சேம்பல் கிளத்தி யிருப்பதை நண்டு கவனிக்கவேண்டும்.

கல்வியில்லாக் குறையை நிவர்த்திக்க வழிதெரியாமல், நாம் நம் பெண்களை அன்னிய மதஸ்தரிடம் ஒப்புவிக்கின்றதின் பயனைப் பல பேர் அனுபவித்தார்கள்—அனுபவிக்கிறார்கள்—அனுபவிப்பார்கள்.

நேயர்களே! இதனாலன்றோ "இந்தியாவின் சிறப்பு பெண்களின் பாதுகாப்பிலிருக்கிறது. நாம் ஆண்களுக்கு எவ்வளவுதான் பொருட் செலவு செய்து கல்வி கற்பித்து பைபிலைப் போதித்தாலும், அவர்கள் பாடசாலையை விட்டு உலக விஷயங்களில் நுழைந்தவுடன் படித்த பைபில் எந்தப்பக்க மிருக்கிறது என்று கூடக் கவனிக்கிறதில்லை. எவ்வளவு பொருட் செலவு செய்தாலும் இந்திய வாலிபர்களைக் கிறிஸ்துவர்களாக்க முடியாது. ஆதலால், ஆடவர்களை நம்மதத்தில் சேர்ப்பதற்காகச் செலவு செய்வதை விட்டுப் பெண்களுக்காகச் செலவு செய்து நமது மார்க்கத்தைப் போதித்தால் அவர்கள் தங்கள் காவலைக் கைவிடக்கூடும். அது சமயம் நமது காரியம் கைகூடும்" என்று ஒரு பாதிரியார் பகர்ந்தார்?

ஆகையினால் பெண்களை நாம் பெரிதும் மதித்தல் வேண்டும். போதுமான மதக்கல்வியும், உலக வியலறி கல்வியும் கட்டாயம் கொடுத்தல் வேண்டும். பெண்களே நமது நாட்டுக்குப் பெரிதும் உபகாரிகளாவார்கள். அவர்களே தங்களுடைய குழந்தைகளுக்கு நல்லறிவு புகட்டும் நற்போதக நன்மணிகள். சிவாஜியின் கீர்த்திக்குக் காரணம் அவர்தாயல்லவா? ஆகையினால், நம் நாட்டுப் பெண்களுக்கு கல்விப் பயிற்சி தந்து அவர்களைப்பெருமை படச் செய்வீர்களாகவும்.

பி. எஸ். குப்புசாமி நாடார்,
பள்ளபாளையம்.

## கள்ளிகுளம்பால்ய நாடார்
## சங்கம், கொளும்பு.

இம்மூடம் புனைந்த சங்கம் சென்ற 10—6—28 ல் உனுப்பெட்டி 9 ம் நிர். கட்டடத்தில் ஸ்ரீமான் பு. வி. ஏசுவடிய நாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூடினது. அவ்வமயம் ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர். ஸ்ரீமான் அ. ப. மரியவிசுவாச நாடார் அவர்களால் தேவஸ்துதி பாடப்பட்டதும், ஒற்றுமையைப்பற்றி ஸ்ரீமான் அ. ச. மதுரேந்திர நாடார் அவர்கள் உபந்நியாசம் செய்தார். அதன் பின் ஸ்ரீமான்களான, அ. ப. மரியவிசுவாச நாடார், புளி. அ. சவரிமுத்து நாடார், க. அ. நட்சத்திர நாடார் ஆகியவர்கள் பிரசாரகர்களாக நியமிக்கப்பெற்றார்கள். பின்பு ஆலோசனைக் கமிட்டி மெம்பர்கள்தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பின் காரியதரிசியவர்களால் வழக்கம் போல் வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டு பொக்கிஷதார் ஸ்ரீமான் வி. அ. பரியநாடார் அவர்கள் கையிருப்புத் தொகையை பரிசோதகர் ஸ்ரீமான் உ. [illegible] சோதனை செய்ததில் கையிருப்பு ரூ 208. சதம் 7-ம், பட்டுவாடா செய்யப்பெற்றது ரூ 900மாக மொத்தம் இருப்பு ரூ 1108. ச 7 கனம் பொக்கிஷதார் அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது. பின் ஸ்ரீமான் அ. ச. கு. இருதய நாடார் அவர்களால் ராஜ வாழ்த்துப்பாடப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது என்று கௌரவக் காரியதரிசி ஸ்ரீமான் புளி. ம. ம. நட்சத்திர நாடார் எழுதுகிறார்.

## அறிவுத்திரள்.

ஒன்றை ஆக்கவோ அல்லது அழிக்கவோ வேறொன்றின் உதவி தேவையாயிருக்கிறது.

*　*

தவறி நெருப்பில் கைபட்டுவிட்டால் சுடாதிராது. அதுபோல்ஒருபாவத்தை—குற்றத்தைத் தெரியாமல் செய்து விடுவதால் செய்தவர்களை அது சாராதென்பதில்லை. ஆனால் அதற்கு மன்னிப்பு உண்டு.

*　*

உதவிசெய்தல் உயர்ந்த செய்கை. ஆனால் ஒருவரைக் கெடுத்து இன்னொருவரை வாழ வைப்பது முழுத் தப்பிதமான செய்கை.

*　*

நம் சம்பந்தப்பட்ட—நமக்குத் தெரிந்த ஒருவர் விஷயத்தை அவர் கூறுமுன் நாம் அவசரப்பட்டுக் கூறுவதோ அல்லது எழுதுவதோ நன்மையை ரத்துசெய்து விடும்.

*　*

வீட்டில் நெருப்புப்பற்றி எரிவதோடு காற்றும் கலந்து கொண்டாலெப்படியோ, அப்படியே மனிதர்களிடம் பேராசை யோடு துரோக சிந்தையும் கலந்து கொண்டால்.

*　*

அநேக வாலிபர்கள் பெரிய மனிதர்களாக அவாக்கொள்கிறார்கள். ஆனால் அனேக பெரிய மனிதர்கள் வாலிபத்தை யடைய இச்சிக்கிறார்கள்.

*　*

அனேக பாலியர்கள் மண முடிந்துக் காதலியோடு இன்பமாய் வாழ விரும்புகிறார்கள். ஆனால் இல்லறத்திலிருக்கும் அனேகர் திருமணம் செய்யாதிருந்தோமா வென எண்ணுகிறார்கள்.

*　*

அனேகர் பெரிய வகுப்புவரை படித்திருந்தால் நலமாயிருக்குமே யென நினைக்கிறார்கள். ஆனால் பலர் ஏராளப்பணம் செலவழித்து பெரிய வகுப்புவரை படித்தும் சோற்றுக்கு வழியில்லையே யென ஏங்குகிறார்கள்.

*　*

பல உத்தியோகஸ்தர்கள் வியாபாரம் செய்து ஒருவருக்கும் அடிமையாயின்றி வாழலாமேயென எண்ணுகிறார்கள், பல வியாபாரிகள் படித்து உத்தியோகம் பார்த்துக்கொண்டு ராஜா போலிராமற் போனோமே யென நினைக்கிறார்கள்.

*　*

வேலை கிடைக்காவிட்டால் அல்லது செய்யாவிட்டால் சோறில்லை; பத்துபபணமிருந்தால் கவலையில்லையே என ஏழை ஏங்குகிறான். நிறையப் பணமிருந்தும் தினமும் கவலையும் கஷ்டமுமாயிருக்கிறதே; ஏழைகள் போல் திருப்தியாய் வாழக் கிடைக்கவில்லையே எனச் சீமான் நினைக்கிறான். ஏழை செல்வவானாக விரும்புவான். ஆனால் சீமான் ஏழையாக விரும்பான். அவன்சீமானாயிருந்து கொண்டே ஏழை போல் திருப்தியாய்க் கவலையற்று சந்தோஷமாய் வாழவே விரும்புகிறான்.

*　*

அறியாமையும், சோம்பலும், தரித்திரமும், கடனும் நோயும் மிக நெருங்கிய பந்துக்கள்.

*　*

கவலை யின்மையே சுகவாழ்வு. நோயின்மையே செல்வ யோகம். இல்லார்க்கு நல்குவதே அறம். தேசாபிமானமே திரவியம். மௌனமே கௌரவம். உற்சாகமே வெகுமதி. மனச் சாட்சியே நியாயஸ்தலம். உழைப்பே பிழைப்பு. கல்விப் பொருள் அறிவுத்திரள். அறிவே துணை. அன்பேதெய்வம்.

அ. கு. அண்ணாமலை.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



காத்துலக பெயர்பிரும்ப நந்த முக்தி
தந்நருள் தங்கம் நாம.
சேது மீகதி செபபோறட்கு செவ்விட
நீக்கம் பிரிவை திநிதியக்க செம்மாஞ்
செல்லமை மிக்கத வெனிமைய வாத பிழ
நிறைவான் தூரிய வாழ்வைத்.
தீதில் பயமார் பொருணைத் திருவருளே
நினைவார் சிந்தை செய்வாம்.

---

நாடார்குல மித்திரன்
விபவ ௵ ஆனி மீ ௫உ

---

## நாடார் மகாநாடும், வாலிப நாடார்களும்.

நமது நாடார் மகாஜன சங்கம் மகாநாடுகள் பதினொன்று வரையும் நடந்து 12—வது மகாநாடு அருப்புக்கோட்டையில் நடக்கப் போகிறது. ஆதியில் மகாஜன சங்கத்தை ஸ்தாபித்து மகாநாடுகளை நடத்த முயற்சித்தவர்கள் வயதிலும், அறிவிலும், அநுபவத்திலும் மிகுந்த பெரியோர்களே என்றாலும், அவர்கள் ஆக்கும் உறுப்புகளுக்கு அலங்காரமாகவும் அதிசயமாகவும் காணப்படுவது இளைஞர் எழுச்சி என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. நாடார் மகாநாடு ஆரம்ப திசையில் சிறிது தளர்ந்து இரண்டொரு வருடங்களில் நின்று போனதை மீண்டும் உருப்படச் செய்து, சங்கத்துக்குமூலபுருஷரான பொறையாறு ராவ்பகதூர் ஸ்ரீமான் ரத்தினசாமி நாடார் அவர்கள் பெயர் என்றும் நிலவச் செய்த பெருமையை வாலிப நாடார்களுக்கே கொடுத்து விடலாம்.

நமது மகாநாடுகள் வளர்ச்சி பெற்று வரும் தருவாயில், வாலிபர்களுக்குள் ஓர் புது உணர்ச்சி யுண்டாகி மகாநாட்டை ஒட்டித் தனி மகாநாடு நடத்த வேணுமென்று எட்டாவது மகாநாடு வரையும் முயற்சி செய்து, மதுரையில்ஒன்பதாவது மகாநாடு கூடும் போது ஒருவாறு உருவாக்கப் பார்த்தும் பூர்த்தியடையாமற் போய் விட்டது. அக்குறையானது கும்பகோணம் வாலிபர்களுடைய சலியா முயற்சியினலே கும்பகோணம் மகாநாட்டின் போது முதல் மகாநாடு கூட்டப் பெற்று பற் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. அவற்றில் சில தீர்மானங்கள் அமுலுக்கு வந்துகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பெரியவர்களுக்கும் வாலிப நாடார்கள் தனியாகத் தகாத வழிகளிற் சென்று சங்கடங்களை உண்டாக்கி விடுவார்களோ வென்ற சந்தேகமும் நீங்கியிருக்கக் கூடும். வாலிபர்கள் முயற்சியில் நல்ல நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கலாம். அதற்கேற்ப வாலிபர்களுடைய வாக்குஞ் செயலும் காக்குமுறையும் நோக்குதற்குச் சமூகமாய்த் தோன்ற வேண்டும். 'அவசரப் படா தாண்மை ஆழ்ந்து யோசிப்பதழகு' என்பதை முன் வைத்துப் பொறுமை இழந்து போகாமல் சாத்வீகமாய் நடப்பதே சாலவும் நன்றென்பதை வாலிப நண்பர்கள் மனதிற் கொள்ள வேண்டும். அவர்களுடைய முயற்சி நாடார் சமூகத்திற்கும் நமது நாட்டுக்கும் இன்றியமையாததா யிருக்கவும் வேண்டும். அவர்களுடைய நன் முயற்சி மென்மேலும் வளர்ந்து தாய்ச் சங்கத்தை மிகவும் வலுப்படச் செய்யுமாக.

இம் முறை அருப்புக்கோட்டையில் கூடும் வாலிப நாடார் மகாநாட்டுக்கு சமரச சன்மார்க்க சம்பன்னரும், தேசபக்த சிரோமணியுமான திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமை வகிப்பதாலும், நாடார்களில் லக்ஷாதிபதியும், பிரபல வர்த்தகரும், பாங்கருமான அருப்புக்கோட்டை ஸ்ரீமான் மா. வே. மாயநாடாரவர்கள் திருக்குமாரர் ஸ்ரீமான் மாணிக்கவேலு நாடார் அவர்கள் வரவேற்புக் கழகத் தலைவரா யிருப்பதாலும், பலவூர்களிலிருந்தும் வாலிப நண்பர்கள் ஏராளமாக வரக்கூடிய அறிகுறிகள் காண்பதாலும் வாலிபநாடார் மகாநாட்டன்றைய் மிக நன்னாளா யிருக்குமென்று நம்புகின்றோம். அங்ஙனமே யாகவென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வருட மொருமுறை கூடி, வாய் வேதாந்தம் பாடி வாளாவிருக்கும் மற்ற மகாநாடுகளைப் போல் கண்மூடி மௌனியாகிவிடாமல் வாலிப நாடார் மகாநாடு நமது தாய் மகாநாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து, செய்த தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டு வரும் படி செயலில் காட்டுமாக.

சமூக ஊழியமே சாலச் சிறந்ததென எல்லா வாலிபர்களும் மனதிற்கொண்டு நாடார் சமூக சீர்திருத்த வழிகளில் தங்கள் கவனத்தைச் செலுத்தி ஏழை மக்களை ஈடேற்றும் வேலைக்குத் தியாகம் செய்ய முன் வருவார்களாக.

---

## நாடார் 12-வது மகாநாடு, அருப்புக்கோட்டை.

### உபசரணைக்கமிட்டி அறிக்கை நிர். 7.

1928-௵ ஜூலை௴ 4, 5, 6, உ களுக்கு விபவ௵ ஆனி௴ 21, 22, 23 உ களில் இம்மகாநாடு நடைபெறும். சென்னைக்கவர்ன்மென்ட் முதன் மந்திரி கனம். டாக்டர்.பி.சுப்பராயன் அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைப்பார்கள்.

மகாநாடு கூடும் கொட்டகை வேலை பெரும்பாலும் முடிந்துவிட்டது. கூடிய சீக்கிரம் முழுதும் முடிந்துவிடக்கூடும். போஜனக்கொட்டகை வேலையும் துரிதமாய் நடந்துவருகிறது. டிக்கெட் விற்பனைக்குப் பல பாகங்களுக்கும் அபிமானிகளை உபசரணைக் கமிட்டியார் அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

பிரதிநிதிகளுக்கு சேர்த்தியான முறையில் போஜன மளிப்பதற்கு நளபாகன், பீமபாகன் எனப்பேர் பெற்ற விருதுநகர் ஸ்ரீமான் பாலப்ப நாடார் அவர்களை நியமித்திருக்கிறார்கள்.

நாடார்கள் வசித்தும் பற்பல இடங்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகளும், நாடார்குலத் தலைவர்களும் மகாநாட்டிற்கு விஜயஞ் செய்வார்கள் என்று கடிதங்கள் வந்து கொண்டு இருக்கின்றன.

நாகபட்டணம் நாடார் தொண்டர் படைத் தலைவர் ஸ்ரீமான் எஸ். கே. ராமசாமிநாடார் அவர்கள் தமது சகாக்களுடன் வருவதாக அறிவித்திருக்கிறார்கள்.

கும்பகோணம் வாலிப நாடார்கள் தஞ்சை ஜில்லா முழுதும் மகாநாடு விஷயமாய்த் தகுந்த பிரசாரம் செய்து டிக்கெட் விற்பனைக்கு ஒத்தாசை செய்வதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

இலங்கை, பர்மா, சிங்கப்பூர், பினாங்கு முதலிய இடங்களிலிருந்து பிரதிநிதிகள் அதிகமாக வருவார்களென எதிர் பார்க்கப்படுகிறது.

திருவனந்தபுரம், கொச்சி முதலிய சமஸ்தானங்களிலுள்ள நாடார்களும் மகாநாட்டிற்கு விஜயம் செய்வார்களென எதிர்பார்க்கப் படுகிறது.

தெற்கேயிருந்துவரும் பிரதிநிதிகள் விருதுநகர் ஸ்டேஷனில் இறங்கவேண்டியவர்களாகவும். விருதுநகருக்கும் அருப்புக்கோட்டைக்கும் 11 மைல் தூரமாகும். இருவிடங்களுக்கும் மோட்டார் சர்வீஸ் நடந்து வருகிறது. வடக்கிலிருந்து வரும் பிரதிநிதிகள் மதுரை ஸ்டேஷனில் இறங்கலாம். மதுரையிலிருந்து அருப்புக்கோட்டை 30 மைல் தூரத்திலுள்ளது. இவ்விரு விடங்களுக்கும் மோட்டார் சர்வீஸ் உண்டு.

மகாநாட்டிற்கு விஜயம் செய்யும் பிரதிநிதிகளுக்கு மோட்டார் வசதிகள் ஸ்பெஷலாக ஏற்பாடு செய்ய உபசரணைக் கமிட்டியார் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

மூ. ஆ. முத்துநாடார்,
பொதுக்காரியதரிசி.

ஃ ஃ

## வாழ்த்துக்கள்.

அண்மையில் அருப்புக்கோட்டையின் கண் நடைபெற விருக்கும் நாடார் 12—வது மகாநாட்டைத் திறந்து வைப்பதற்கு நமது அன்பர், குமாரமங்கலம் ஜமீன்தாரும், சென்னை கவர்ன்மெண்ட் முதல் மந்திரியுமான கனம். டாக்டர். பி. சுப்பராயன் எம். ஏ., பி. ஸி., எல். எல். டி. அவர்கள் மனமுவந்திருப்பது பற்றி அன்னவரை யாம் மிகவும் பாராட்டுகின்றோம். மகாநாடு சிறப்பாய் நடைபெறும் என எங்கும் ஒலிக்கும் முரசொலி போன்ற பேச்சு எம் இரு செவி புகுந் தின்புறுகின்றேம். ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்து சிறப்பிப்பார்களாக.

மகாநாட்டுக்கு விஜயம் செய்யும் அன்பர்கள் நாடார் குல முன்னேற்றத்திற்கும், நம் நாட்டின் க்ஷேமத்திற்குமான பல அரிய தீர்மானங்கள் கொணருவார்களென நம்புகிறேம். சர்வ வல்ல தயாபரன் மகாநாட்டைச் சம்பூர்ண சுபமாய் முடித்து வைக்கத் துதிக்கின்றேன்.

நீலகிரி—ஸ்ரீஞானனந்த சுவாமிகள்,
திருச்சிராப்பள்ளி.

ஃ ஃ

சமீபத்தில் அருப்புக்கோட்டையில் நடைபெற விருக்கும் நாடார் 12—வது மகாநாட்டு வேலைகள் ஜரூராய் நடந்து வருவது அறிந்து அளவிலா அகமகிழ்வுறுகின்றேன். இதுகாறும் நடைபெற்றிருக்கும் 11 மகாநாடுகளைப் பார்க்கிலும் இம் முறை நடைபெறும் மகாநாடே சிறப்புடைத்தா மென்பதற்குப் பல அரிய பெரிய விஷயங்களெல்லாம் முடிவுக்கு வரப்போகின்றனவெனக் காணக் கிடக்கின்றது. மகாநாட்டுத் திறப்பாளருடையவும், தலைவருடையவும் மாண்புறு நிலத்தைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. உபசரணைக் கமிட்டி உத்தியோகஸ்தர்களும் மிக மிகப் பொருத்தமுள்ளவர்களே யாவர். இத்தியாதி விஷயங்களைச் சீர்தூக்கின் அருப்புக்கோட்டை மகாநாட்டின் பெருமை நன்கு விளங்கும். எனவே மகாநாட்டுக்கு ஏராளமான பிரதிநிதிகள் விஜயம் செய்வார்கள் என நம்புகிறேன். அங்ஙனமே விஜயமாகி மகாநாட்டைச் சிறப்பிக்க நாடார் குல அபிமானிக ளனைவரையும் வேண்டுகிறேன். எல்லாம் வல்ல இறைவன் மகாநாடு மங்களகரமாய் நிறை வெய்தக் கிருபாளிக்கப் பிரார்த்திக்கிறேன். ஆண்டவன் அருள் பெருகுவதாகுக.

எஸ். பி. என். செட்டியார்,
நிலக்கோட்டை.

ஃ ஃ

---

## வாலிப நாடார் 2-வது மகாநாடு, அருப்புக்கோட்டை.

### அழைப்புப் பத்திரம்.

வாலிப நண்பர்களே!

எல்லாம் வல்ல இறைவனின் திருவருட் பேற்றால் நமது வாலிப நாடார் 2—வது மகாநாடு அருப்புக்கோட்டை நாடார்மகாஜன சங்கம் 12—வது மகாநாட்டின் பாண்டிய விலாஸ் கொட்டகையில் 5—7—28-க்குத் தமிழ் விபவ௵ ஆனி௴ 22உயில் கூடும்.

அது சமயம், சென்னை "நவசக்தி" பத்திராசிரியரும் பிரபல சமூக தேச சீர்திருத்தப் பெரியாருமாகிய உயர் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் அக்கிராசனம் வகிப்பார்கள்

வாலிபர் இயக்க சம்பந்தமாயும், சமூக தேசிய ராஜீய சம்பந்தமாகவுமுள்ள பல விஷயங்கள் ஆலோசனைக்கு வரும்.

அனேக அறிஞர்களாலும், பிரபல பிரமுகர்களாலும் பல அரிய உபந்நியாசங்கள் செய்யப்பெறும்.

பிற்கால வாழ்வில் சமூக முற்போக்கில் பெரும் பொறுப் பேற்கவிருக்கும் நாம் இது சமயம் கூடி யோசிக்க வேண்டியதும், ஒருவர்க்கொருவர் அளவளாவியிருக்க வேண்டியதும் அவசியமாயிருப்பதால், தாங்கள் ஒவ்வொருவரும் மகாநாட்டுக்குத் தவறாது விஜயஞ் செய்து மகாநாட்டைச் சிறப்பிக்க வேணுமாய் விரும்பி அழைக்கின்றோம். ஃ ஃ

### திருத்தம்.

நமது வாலிப நாடார் மகாநாடு "வாலிப நாடார் 3-வது மகாநாடு" என்றிருந்ததைச் சில காரணங்களை முன்னிட்டு "வாலிப நாடார் 2-வது மகாநாடு" என்று திருத்திக்கொண்டோ மென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அ. கு. அண்ணாமலை,
சே. ராமசாமி,
காரியதரிசிகள்.

---

## கால் பந்தாட்டப் போட்டி.

நமது 12-வது மகாநாட்டைச் சிறப்பிக்கும் பொருட்டு நடாத்த விருக்கும் கால் பந்தாட்டப் போட்டி கமிட்டி அங்கத்தினர்களின் கூட்டம் சென்ற வைகாசி௴ 31உ (13—6—28) நடைபெற்றதில், விளையாட்டுப் பொருத்தலுக்கு டீம்களை ஒழுங்கு செய்வான் வேண்டி சீட்டுப் போட்டு எடுப்பதென்த் தீர்மானமாகி, அத் தீர்மானத்திற் கிணங்க சீட்டுப் போட்டு எடுத்து அடியிற் கண்டவாறு ஒழுங்கு செய்திருக்கின்றோ மென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்:—

3—7—28-ல் தூத்துக்குடி "ரைஸிங் ஸ்டார்" டீமும் (எ), விருதுநகர்புட்பால் டீமும் (பி), ஜெயித்த டீம் எப்.
4—7—28ல் அருப்புக்கோட்டை "ஸ்ரீமுத்துமாரியம்மன்" டீமும் (ஸி), தூத்துக்குடி "காரைப்பேட்டை நாடார்" புட்பால் டீமும் (டி). ஜெயித்த டீம்—ஜி.
5—7—28-ல் விருதுநகர் "சண்முகராஜ்" புட்பால் டீமும் (இ), 3-7-28-ல் ஜெயித்த எப்—டீமும். ஜெயித்த டீம்—எச். 6—7—28-ல், 4—7—28-ல் ஜெயித்த ஜி—டீமும், 5—7—28-ல் ஜெயித்த எச்—டீமும். இவ் விரண்டு டீம்களே பைனல் டீம்களாகும். இவ் விரண்டில் ஜெயித்த டீமுக்கு மெடல் களளிக்கப்படும்.

ஜி. வ. தர்மதுரை,
என். நடராஜப்பாண்டியன்,
காரியதரிசிகள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

### கவுன்ஸில் மீட்டிங்கு.

விபவ வருஷம் வைகாசி ௴ 28 உ (11—6—28) ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு சங்கம் ஆபீஸில் மதுரை, ஸ்ரீமான் ஜே. பி. ஜெனெட் நாடாரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்ற கவுன்ஸில் மீட்டிங்கில் அடியிற்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன.

ஆஜராயிருந்த கவுன்ஸில் அங்கத்தினர்கள் பின் வருமாறு:—

ஸ்ரீமான்களான பா. ம. பாண்டிய நாடார், ப. வ. சோமசுந்தர நாடார், ஜே. பி. ஜெனெட் நாடார், ப. ரா. முத்துச்சாமி நாடார், சி. வ. அ. வாலசுப்பிரமணிய நாடார், பெ. சு. பெரியசாமி நாடார், பி. வாழவந்த நாடார், வ. டானியேல் நாடார்—மதுரை, சிவந்தி நாராயண நாடார், பெ. சி. சிதம்பர நாடார்—விருதுநகர், அரி. அ. செ. கந்தசாமி நாடார், ப. அ. குமரவேல் நாடார்—தூத்துக்குடி, எஸ். கே. ராமசாமி நாடார்—நாகபட்டணம், கே. முத்து நாடார்—திருச்சுளி, ஆர். கே. பழனிச்சாமி நாடார்—சின்னமனூர், பி. கே. எஸ். அய்யம்பெருமான் நாடார்—பட்டிவீரன்பட்டி, மூ. வடிவேல் நாடார்—சமையநல்லூர்.

1. 1927 ௵ எப்பிரல் ௴ 1 உ முதல் 1928 ௵ மார்ச்சு ௴ 31 உ யோடு முடியவுள்ள சங்கம் வரவுசெலவு கணக்குகளைக் குறித்தும், வேலைகளைக் குறித்தும் காரியதரிசிகளின் ரிப்போர்ட்டு வாசிக்கப் பெற்று ஒப்புக் கொள்ளப் பெற்றது.

2. 1927—28-ம் ௵த்திய கணக்குகளைப் பரிசோதனை செய்ய மதுரை, ஸ்ரீமான்களான பி. ஆர். முத்துச்சாமி நாடார் அவர்களையும், பி. வாழவந்த நாடார் அவர்களையும் ஆடிட்டர்களாக நியமிக்கலாயிற்று.

3. 1928 ௵ ஜூலை ௴ 4, 5, 6 உ களில் அருப்புக்கோட்டையில் நடைபெறும் 12-வது கான்பரன்ஸ் உபசரணைக் கமிட்டி மெம்பர்கள் சங்கத்தின் 35-வது விதிப்படி சங்கத்தின் மெம்பர்களாக இருக்க வேண்டுமாதலால் உபசரணைக் கமிட்டி மெம்பர்களிடமிருந்து வர வேண்டிய சந்தாப் பாக்கி ரூபாய் 152—0—0 ம் வசூல் செய்து கொண்டு கான்பரன்ஸை அங்கீகாரம் செய்து கொள்ளும்படி இக் கவுன்ஸில் காரியதரிசிகளுக்கு அதிகாரம் கொடுக்கிறது.

1928 ௵ ஜூலை ௴ 4, 5, 6 உ களில் அருப்புக்கோட்டையில் நடைபெறும் 12—வது கான்பரன்ஸின் சப்ஜெக்ட் கமிட்டிக்கு அடியிற் கண்ட மூன்று உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டனர்.

பிரஸிடெண்ட்—ஸ்ரீமான் வெ. கனகசபை நாடார் அவர்கள்—பொறையார்.

காரியதரிசி— ஸ்ரீமான் ப. வ. சோமசுந்தர நாடார் அவர்கள்—மதுரை.

### அங்கத்தினர்கள்.

ஸ்ரீமான்களான ஊ. பு. அ. சௌந்தர பாண்டிய நாடார்—பட்டிவீரன்பட்டி, பா. ம. பாண்டிய நாடார், ஆ. அ. ஆறுமுக நாடார், பெ. அ. பெரியசாமி நாடார், மா. வே. பழனிச்சாமிநாடார், வ. பொன்னையா நாடார், கே. முத்துக் குமார் நாடார்—மதுரை, ப. உ. ஆ. தெம்பாநாடார், எஸ். ஏ. முத்துநாடார், சொ. ஆ. சொக்கலிங்க பாண்டியர், ம. உ. மாயாண்டி நாடார், அ. பெ. இரத்தினவேல் நாடார், வ. சு. வள்ளிநாயக நாடார், ச. சு. பழனிச்சாமி நாடார், மு. மு. முத்துக்குமாரசாமி நாடார், மா. கு. தங்கவேல் நாடார், ஆ. இ. ஆ. இளயபெருமாள் நாடார், பா. சி. ச. பாண்டிய நாடார், ச. க. சு. துரைச்சாமி நாடார், பா. ம. மகாலிங்க நாடார், வா. ந. மாணிக்க நாடார், பெ. ஜெகநாத நாடார் — அருப்புக்கோட்டை, அரி. அ. செ. கந்தசாமி நாடார், ப. அ. குமரவேல் நாடார்—தூத்துக்குடி, எம். முத்தலைவகுண்ட நாடார்—[illegible]ட்டாத்தி, கு. மாரியப்ப நாடார்—எட்டையாபுரம், இ. பி. குமாரவேல் நாடார்—முக்கூடல், எஸ். வெள்ளைய நாடார்—கூடங்குளம், கே. வ. ஆர். மகாலிங்க நாடார்—கடம்பூர், ஜி. கலியாணசுந்தர நாடார்—கச்சிநவிளை, ப. வீ. ஆதிமூத்துமாலை நாடார்—உசிலம்பட்டி, மீ. சி. சுந்தர நாடார்—போடி நாய்க்கனூர், சி. கா. அய்யாக்காளை நாடார்—ஆண்டிபட்டி, நா. பு. ச. நாச்சியப்ப நாடார்—தேவதானப்பட்டி, மு. வடிவேல் நாடார்—சமையநல்லூர், எஸ். ஆர். சுவாமிக்காளை நாடார்—திருமலாபுரம் (போடிநாய்க்கனூர்), ஆர். கே. பழனிச்சாமி நாடார்—சின்னமனூர், கு. செ. பழனிக்குமார் நாடார்—மதுரை, ஞா. வி. ஆறுமுக நாடார்—சாத்தூர், க. முத்து நாடார்—திருச்சுளி, ஆ. வெ. பழனியப்ப நாடார்—சிவகங்கை, எஸ். நடராஜ நாடார்—சிவகாசி, சி. சிவந்திநாராயண நாடார், ஊ. எஸ். எஸ். எஸ். சங்கரபாண்டிய நாடார், வி. வி. ஷண்முக நாடார், எம். எஸ். பி. செந்திக்குமார் நாடார், பெ. சி. சிதம்பர நாடார்—விருதுநகர், யன். கே. ரங்கசாமி நாடார்—நஞ்சுண்டாபுரம், க. கோபால்சாமி செட்டியார்—புஞ்சை புளியம்பட்டி, ந. கோ. ம. திருவெங்கிடசாமி நாடார்—நல்லகட்டிபாளையம், வி. சுடலைமுத்து நாடார், வீ. சந்திவீர நாடார், எஸ். தங்கவேல் நாடார்—கும்பகோணம், எஸ். பி. ஸ்ரீநிவாச நாடார்—சென்னை, எஸ். வி. எம். சுவடியாநாடார்—கொழும்பு, எஸ். மயிலேறி நாடார், ஜி. எஸ். முத்துச்சாமி நாடார்—உடுமலைப்பேட்டை, வே. பெத்தண நாடார்—தஞ்சாவூர், வ. யன். ஆதிநாராயணப் பெருமான் நாடார்-தண்ணன்கோடு, தென் திருவாங்கூர்; ஜி. யப். ஹென்றி-திருப்பத்தூர், மிஸ். இ. ஜே. ஆபிரகாம், பி. டி. சற்குணர்-திருப்பாப்புலியூர், மா. வெங்கிடாஜலநாடார்—சேலம், வி. சாமிநாத நாடார்—திருவாரூர், த. ரெ. ஜீவரத்தின நாடார்—குருஞ்சிப்பாடி, எஸ். கே. ராமசாமி நாடார்—நாகபட்டணம், வி. தங்கையா நாடார்—புனூர் (தென் திருவாங்கூர்).

5. 12-வது வருடாந்திர ஜெனரல் மீட்டிங்கில் ஆலோசிக்கப்பட வேண்டிய விஷய அஜண்டாவில் முக்கிய கான்பரன்ஸ் தீர்மானங்களையும், கமிட்டிகள் செய்திருக்கும் வேலைகளையும், கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துதல், கட்டாயப் படிப்பு, ஸ்காலர்ஷிப் நிதி, ஸ்காலர்ஷிப் விண்ணப்பம் முதலிய விஷயங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென இக் கவுன்ஸில் தீர்மானிக்கிறது.

6. ஸ்காலர்ஷிப் நிதிக்கு சொத்து வாங்க நியமிக்கப்பட்ட கமிட்டி இது வரை எவ்வித வேலையும் செய்யாததால் அக் கமிட்டியை இக் கவுன்ஸில் கலைத்து விடுகிறது.

7. நாசரேத் போஸ்ட் வாழையடி ஸ்ரீமான் வி. ஒய். பொன்னையா நாடார் அவர்கள் லெட்டர் வாசிக்கப்பட்டு சங்கத்தின் பொருளாதாரநிலை ஐ. வி. எஸ். பரீட்சைக்கு பண உதவி செய்ய இயலாதிருப்பதைக் குறித்து இக் கவுன்ஸில் வருந்துகிறதென்பதை அவருக்குத் தெரிவிக்க இக்கவுன்ஸில் தீர்மானிக்கிறது.

8. தென் திருவிதாங்கூர் ஸ்ரீமான் வி. தங்கையா நாடார் அவர்கள் பனிக்கட்டி தொழிற்சாலை ஒன்று சங்கத்தின் சார்பாக நடத்த வேண்டுமென எழுதியுள்ள லெட்டர் வாசிக்கப்பட்டு அவர் கோரிக்கைப்படி செய்ய சங்கம் பொருளாதார நிலை இடங்கொடுக்காதிருப்பதைக் குறித்து இக் கவுன்ஸில் வருந்துகிறதென்பதை அவருக்குத் தெரிவிக்க இக்கவுன்ஸில் தீர்மானிக்கிறது.

9. ராயல் கமிஷன் முன்பு சொல்லும் சாக்ஷியங்களைக் குறித்து காரியதரிசிகள் ஸ்டேட்மெண்ட் தயார் செய்து அதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் கமிட்டி மெம்பர்களைக் கூட்டி பரிசிலனை செய்து அதை அரசியல் கமிஷன் காரியதரிசிகளுக்கு 26—6—28 க்குள் அனுப்ப வேண்டுமென்று இக் கவுன்ஸில் தீர்மானிக்கிறது.

பா. ம பாண்டிய நாடார்,

ப. வ. சோமசுந்தர நாடார்,

காரியதரிசிகள்.

## செய்தித்திரட்டு.

தொல்லம் தாலுகா நெடும்பனை எனும் கிராமத்தில் பெரும்புயல் காற்றடித்து அங்குள்ள ஒரு மத்திய தரப் பாடசாலை விழுந்து விட்டது. இதன் பயனாய் 4 மாணவர்கள் இறந்தும் பல மாணவர்கள் பலத்த காயம் பட்டும் போயினர்.

* *

சென்னை ஸ்ரீ. கே. எஸ். வெங்கிட்டரமணி இந்திய வாழ்க்கையைப் பற்றி எழுதிய "முருகன்" என்னும் புஸ்தகத்தில் 300 பிரதிகளை பார்லிமெண்ட் அங்கத்தினரிடையே கொடுத்து மேயோ பிரசாரத்திற்கு எதிர்ப் பிரசாரம் செய்ய ஸ்ரீ ஜி. டி. பிர்லா எம். எல். ஏ. முடிவு செய்திருக்கிறார்.

* *

பண்டித மோதிலால் நேருவின் சகோதரி குமாரி ஸ்ரீமதி ஷாம் குமாரி நேரு எல். எல். பி. பரீக்ஷையில் முதன்மையாகத் தேறினர். அவ்வம்மையார் அலகபாத் ஹைக்கோர்ட்டில் சேர்ந்து ஸர். தேஜ் பகதூர் சாப்ருவின் கீழ் வக்கீல் வேலை பயில்வார். வட இந்தியாவில் பெண் வக்கீலாக வந்தது இது தான் முதற்றடவையாகும்.

* *

லண்டனில் ஹாம்ப்ஸ்ட்டெட் என்றவிடத்தில் ராஜ கோட்டை மகாராஜாவின் குமாரர் மரணமடைந்தார். அவரது சரீரம் 'கோல்டர்ஸ் கிரீ'னில் தகனம் செய்யப்பட்டது.

* *

இராமநாதபுரம் ராஜா தம் சகோதரர் ஸ்ரீ ராஜாராம் பாண்டியன் மீது தொடுத்திருக்கும் அவதூறு வழக்கு நாளிது ஜூன் ௴ 28உ மதுரையில் விசாரிக்கப்படும். ராஜா அவர்களின் சார்பாக ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் ஆஜராவார் எனத் தெரிகிறது.

* *

திருச்சி மலைக் கோயிலுக்குள் ஸ்ரீ ஜே. என். ராமநாதனும், அவருடைய சகாக்களும் பிரவேசிக்க யத்தனம் செய்து மலை மீது சென்று கொண்டிருக்கையில் சிலர் அவர்களைத் தடுத்து அவர்களிலொருவரை நையப் புடைத்துக் காயப்படுத்தி யிருக்கிறார்கள்.

* *

சென்னைக்கு இரண்டு ஆகாயக் கப்பல்கள் வந்திருக்கின்றன. இதுவரையும் சென்னை வாசிகளுக்கு ஆகாயக் கப்பல்களில் ஏறிப்பறக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததில்லை. இப்பொழுது வந்திருக்கும் கப்பல்கள் அவர்கள் ஆகாயப் பிரயாணம் அனுபவிக்கும் சந்தர்ப்பத்தையளிக்கவே வந்திருக்கின்றன.

* *

இந்திய ஒலிம்பிக் ஹாக்கி விளையாட்டுக் காரர்கள் நிதிக்காக வைஸிராய் ரூ 500-0-0 நன் கொடை யளித்திருக்கின்றார்.

* *

பிராமணரல்லாத யாத்ரீகர்களின் உதவிக்காக மைசூர்மகாராஜா திருப்பதி மலையில் 25 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு சத்திரம் கட்டிவைக்கப்போகிறார்.

* *

திருப்பதியிலிருந்த மூன்று பெரிய பாறைகளை அப்புறப்படுத்தி விட்டால் மழை பெய்யுமென்று ஜனங்கள் நம்பி அப்பாறைகளை ஊர்வலமாகக் கொணர்ந்து ஊருக்கு வெளியே வைத்திருக்கிறார்கள். அப்புறப்படுத்திய மறுநாள் தற்செயலாக மழைபெய்துவிட்டது. இவ்விதத்தால் தான் அப்பாறைகள் வேறு இடத்திலிருந்து திருப்திக்கு முன்பு வந்ததாம். இனி அப்பாறைகள் அடுத்தடுத்துள்ள ஊர் ஜனங்களால் சமுத்திரம் போய்ச் சேரும்படி செய்யப்படும். என்னே மூட நம்பிக்கை!

* *

ஆகாசத் தந்தியைக் கண்டுபிடித்த இந்தியர் ஸ்ரீ ஹன்ஸ்ராஜ் என்பவர் கல்கத்தாவில் டாக்டர் ராமனிடமிருந்து கொண்டு பல ஆராய்ச்சிகள் செய்வதற்காக பண்டித ரூசிராம ஷானி மாதந்தோறும் ரூ 100-0-0 கொடுப்பதாக முடிவு செய்திருக்கிறார். ஸ்ரீ ஹன்ஸ்ராஜும் சம்மதந் தந்துவிட்டார். அவர் தான் கண்டுபிடித்த விஷயங்களைப் பலர் முன்னிலையில் காட்டி வருகிறார்.

* *

## ஆராய்ச்சிக் கோவை.

லண்டன் நகரில் வருஷந்தோறும் 75,000 ஜனங்கள் அதிகமாகி வருகின்றனராம்.

* *

உலகில் உள்ள வேறெந்த இடத்தையும் விடச் சுமத்ரா தீவில் பிராணி வர்க்கங்களும், தாவர வர்க்கங்களும் அதிகமாம்.

* *

தீப்பிடியாததும், வெளியிலுள்ள சத்தத்தை உள்ளே விடாததுமான கட்டடம் கட்டும் பொருள் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

* *

சூரிய, சந்திர, நட்சத்திரங்களின் ஒளிக்கிரணங்களிலிருந்து மின் சார சக்தி உண்டாக்கும் முயற்சி அமெரிக்காவில் வான சாஸ்திரிகளால் செய்யப்பட்டுவருகிறது.

* *

ஸைபீரியாவில் சில சமயம் ஒருநாள் முழுதும் வானவில் பார்க்கலாமாம். ஆகாயத்திலுள்ள நுட்பமான பனித் துணிகளில் சூரிய கிரணங்கள் பிரதிபலிப்பதால் உண்டாகின்றதாம்.

* *

வியன்னா?த்தீவில் ஒரு மலைக் குகையிலிருந்து 2000 நீர் யானைகளின் எலும்புகள் அகப்பட்டன. இவை சரித்திர காலத்திற்கு முற்பட்ட காட்டு மனிதர்களால் கொல்லப்பட்டிருக்க வேண்டுமெனத் தெரிகிறது.

* *

செவ்வாய்க் கிரகத்தில் உயிர்ப் பிராணிகள் உண்டா என்னும் ஆராய்ச்சி நடந்துவருகிறது. 20 மைல் விஸ்தீரணமுள்ள ஒரு பெரிய புகைத் தொகுதியை உண்டாக்கி அதன் மூலம் மேற்படி கிரகத்திலுள்ள ஜீவர்களின் கவனத்தைப் பிடித்திழுக்க முயற்சி செய்யப்படும்.

---

"ஸ்காண்டி நேவியன்" பத்திரிகாசிரியர்களான டென்மார்க் ஸ்ரீ எம். பேஸ்ட்டும், ஸ்வீடன் ஸ்ரீ எம். எஸ்ஸனும் அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு 71 நாட்களில் உலக முழுதும் சுற்றிவந்திருக்கிறார்கள்.

* *

திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் முசிரி யென்னும் ஊரில் பெருந் தீவிபத்தேற்பட்டு ரூ 50000-0-0 வரை நஷ்டமேற்பட்டிருக்கிறது.

* *

காசிபூரில் பக்கிரி ஒருவன் பஞ்சக் கொடுமையினால் தனது 6 வயதுக் குமாரனை ரூ 12-0-0க்கு ஒரு தனவந்தனுக்கு விற்பனை செய்யச் சம்மதித்துப் பத்திரம் பதியச் சென்ற போது சப்ரிஜிஸ்ட்ரார் அப்பத்திரத்தை வாங்கி விசாரணைக்காக சப்டிவிஷனல் ஆபீசருக்கும், கலெக்டருக்கும் அனுப்பியிருக்கிறார். பிள்ளையை விற்குமளவுப் பெரும் பஞ்சம் வந்துவிட்டதோ!

* *

கல்கத்தாவில் நடைபெறப்போகும் அகில இந்திய காங்கிரஸின் தலைவர் பதவிக்கு, மகாத்மாகாந்தி, ஸ்ரீ வல்லபாய்படேல், ஸ்ரீ பண்டிட் ஜவஹரிலால் நேரு ஆகிய மூவர்களை டில்லி மாகாணக் காங்கிரஸ் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. டில்லி மாகாணக் காங்கிரஸ் வருகிற செப்டம்பர் மீ பட்டி பூராவில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

* *

மைசூர் திருவானுயிருந்து வரும் திரு. மிர்ஸா, பட்லர் கமிட்டி சம்பந்தமாகக் கூடிய சீக்கிரம் இங்கிலாந்து செல்லக் கூடுமென்றும், அவருக்குப் பதிலாக ஸர். ஸி. பி. ராமசாமி ஐயர் நியமிக்கப்படலாமென்றும் வதந்தி யுலாவுகின்றது.

### திருத்தம்.

சென்ற வாரம் வெளியான மித்திரனின் 5—வது பக்கத்திலுள்ள செய்தித் திரட்டுப் பகுதியில் 5—வது செய்தியில் இங்கிலாந்து தேசத்தில் டப்ளினில் நடந்த என்றிருப்பதை லண்டனில் [illegible] திருத்திக்கொள்ள வேண்டுகிறோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார் குல மித்திரன்.

1928-ம் வருடம்
ஜூன் மீ 18உ

# ஸத்திய தரிசனம்.

மஹாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 5. அத்தியாயம் 8.

## லக்ஷ்மண ஜூலா பாலம்.

நாம் ஹரித்துவார் கும்பமேளத்தில் ...டைந்த மனக் குழப்பம் மகாத்மா முன்ஷி ராம்ஜீயைக் குருகுலத்தில் கண்டதும் மறைந்து மனவமைதி ஏற்பட்டது. குருகுலத்தில் இருந்த அமைதியையும், ஹரித் துவாரத்திலிருந்த அமைதி யின்மையையும் கண்டு வியப்படைந்தேன். மகாத்மா என்னை மிக்க அன்போடு உபசரித்தார். அங்கிருந்த பிரமசாரிகளெல்லாரும் என்னை வரவேற்பதிலும், உபசரிப்பதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தலானார்கள். அங்கே தான் முதன் முதலாக ஆசாரியா ராம தேவஜீயை அறிமுகம் செய்துகொண்டேன். முதல் முறை அவரைப் பார்த்தபோதே அவர் எத்தகைய ஆற்றல்வாய்ந்தவரா யிருக்க வேண்டுமென்பதை உணர்ந்து கொண்டேன். பல விஷயங்களிலும் நாங்கள் அபிப்பிராய பேத முடையவர்களாயிருந்தும், எங்கள் அறிமுகம் விரைவில் உயரிய நட்பாக மாறிவிட்டது.

நான், ஆசாரியா ராம தேவஜீயுடனும் மற்ற ஆசிரியர்களுடனும் குருகுலத்தில் கைத்தொழில், தேகாப்பியாசம் பயிற்று விப்பதைப்பற்றி நீண்ட நேரம் விவாதித்து வந்தேன். குருகுலத்தை விட்டுப்போக வேண்டி நேரிட்டபோது அவ்விடத்தை விட்டு அகல்வது மிகச் சிரமமாகவே தோன்றிற்று.

ஹிரிஷிகேசம் என்னுமிடத்துக்குச் சிறிது தூரத்தில் கங்கை நதியின் மீதுள்ள லக்ஷ்மணஜூலா என்னும் தொங்கு பாலத்தைப்பற்றி நான் கேள்விப்பட்டிருந்தேன். அனேக நண்பர்கள் அதைப்பார்த்து விட்டுப் போகும்படி என்னை வற்புறுத்தினார்கள். நான் அப்பாலத்துக்கு நடந்து போவதென்று தீர்மானித்து, அதை இரண்டு நிலைமைகளில் முடித்தேன்.

ஹிரிஷிகேசத்தில் பல சன்னியாசிகள் என்னை வந்து பார்த்தார்கள். அவர்களில் ஒருவருக்கு என்னிடம் அத்தியந்த அபிமானம் ஏற்பட்டு விட்டது. என்னுடன் இருந்த போனிக்ஸ் கூட்டத்தார் சுவாமிகளிடமிருந்து பல கேள்விகளுக்கு விடை பெற்றுக்கொண்டார்கள்.

## பூணூலைப் பற்றிய கதை.

நானும் அந்த சுவாமிகளும் மத விஷயமாக விவாதித்து வந்தோம். நான் மத விஷயங்களில் ஆழ்ந்த கருத்துள்ளவன் என்பதை அவர் உணர்ந்து கொண்டார். நான் கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பி வரும்போது மொட்டைத் தலையுடனும், பூணூல் இல்லாமலும் இருப்பதை அவர் கண்டார். இதனால் அவர் சிறிது வருத்தப்பட்டார். "ஹிந்து மதத்தில் நம்பிக்கையுடைய தாங்கள், சிகையில்லாமலும், பூணூல் அணியாமலும் இருப்பதைக் காண எனக்கு மன வருத்தமாகவே இருக்கிறது. ஹிந்து மதத்தினுடைய புறக்கோலங்களில் இவை இரண்டும் முக்கியமானவை. ஒவ்வொரு ஹிந்துவும் அவைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்" என்று கூறினார்.

இவை இரண்டையும் நான் ஒழித்தது பற்றிய விவரத்தை இப்போது விரித்துரைக்க வேண்டியது அவசியமென்று தோன்றுகிறது. நான் பத்து வயது சிறுவனாயிருக்கும் போது என்னுடன் இருந்த பிராமண வாலிபர்கள், தங்கள் பூணூல்களில் சாவிக் கொத்தைத் தொங்கவிட்டுக் கொள்வதைக் கண்டு நானும் அவ்வாறு செய்துகொள்ள வேண்டுமென்னும் ஆவல் எனக்கு உதித்தது. அக்காலத்தில் ... வைசியர்களிடையே பூணூல் அணியும் வழக்கம் இருக்கவில்லை. ஆனால் முதல் மூன்று ... வேண்டுமென்னும் சீர்திருத்தம் அப்போது தான் ஆரம்பிக்கப் பட்டிருந்தது. எனவே, காந்தி வம்சத்தைச் சேர்ந்த பலர் பூணூல் அணிய ஆரம்பித்தார்கள். எங்களுக்குப் பாடம் கற்பித்து வந்த பிராமணர் ஒருவர், எங்களில் இரண்டு மூன்று பேருக்குப் பூணூல் போட்டுவிட்டார். எனக்குப் பூணூலில் சாவியைக் கோர்த்துக் கொள்ள விருப்பமிருந்தபோதிலும் அத்தகைய சௌகரியம் எனக்கு இருக்கவில்லை. ஆயினும் ஒரே ஒரு சாவியை எடுத்து என் பூணூலில் தொங்கவிட்டுக் கொண்டேன். ஆனால் அந்தப் பூணூல் அறுந்துபோன பிறகு அது இல்லை என்னும் கவலை எனக்கில்லை; வேறு புதிய பூணூலையும் அணிந்துகொள்ளவில்லை.

நான் பெரியவனான பிறகும் இந்தியாவிலும், தென்னாப்பிரிக்காவிலும் நல்லெண்ணத்துடனேயே பூணூல் அணியும்படி என்னை வற்புறுத்தியும் பயன் விளைய வில்லை. சூத்திரர்கள் அதை அணியலாகாதென்றால் எங்களுக்கு மட்டும் அதை அணிய என்ன உரிமை இருக்கிறது என்று வாதாடி வந்தேன். அநாவசியமான ஒரு வழக்கம் என்று நான் இதைக் கருதியதற்கேற்ப என்மனம் சமாதான மடையும்படியான பதிலை யாரும் கூறவில்லை. பூணூல் அணிவதில் எனக்கு எவ்வித ஆக்ஷேபமுமில்லை. ஆனால் அதை என் அணிய வேண்டுமென்பதற்கு ஏற்ற விடை இருப்பதாகத் தெரியவில்லை.

நான் வைஷ்ணவன் என்னும் முறையில் என் கழுத்தில் கார்நியை அணிந்து கொண்டிருந்தேன். சிகை அவசியமென்று பெரியோர் கூறி வந்தனர். நான் இங்கிலாந்துக்குப் புறப்படும்போது சிகையையும் எடுத்து விட்டேன். இன்றேல் ஆங்கிலேயர்கள் என்னைக் காட்டுமிராண்டி என்று நினைப்பார்களென்று கருதினேன். இதே எண்ணத்தால் தென்னாப்பிரிக்காவிலிருந்த எனது சிறிய தந்தை சகன்லால் கார்நியையும் சிகையையும் எடுத்து விடும்படி கூறினேன். அது இருப்பதால் அவருடைய பொது வாழ்வில் ஏதேனும் கௌரவ ஹானி உண்டாகுமோ என்று சந்தேகித்தேன். ஆதலின் அவர் மனவருத்தமடைந்தாலும் பாதகமில்லை என்று கருதியே அவரிடம் சிகையை எடுத்து விடும்படி கூறினேன்.

## பூணூலை யார் அணியலாம்?

ஆதலின் எல்லா விஷயங்களையும் பகிரங்கமாகச் சுவாமிகளிடம் சொல்வதற்காகப் பின்வருமாறு கூறினேன்:— எத்தனையோ ஹிந்துக்கள் அவைகளை அணியாமலே ஹிந்துக்களாக இருக்கும்போது, நான் மட்டும் என் அணிய வேண்டுமென்பதன் காரணம் எனக்கு விளங்காததால் அதை அணிய மாட்டேன். மேலும் ஆன்ம நிலையில் இருபிறப்பாளராயினோர் மட்டுமே பூணூலை அணிவதுதான் தர்மமாகும். அதை அணிந்தவர் உயரியதும், பரிசுத்தமானதுமான வாழ்க்கையை அடைந்திருக்கிறார் என்பதற்கு அறிகுறியாக மட்டும் அதை அணிய வேண்டும். அவ்வளவு உயரிய குணத்துக்கு அவசியமான அதை இக்காலத்தில் ஹிந்துக்களும், இந்தியாவும் இருக்கிற நிலைமையில் அணிய உரிமை பெற்றவர்களா என்பது தான் எனக்கு சந்தேகமாயிருக்கிறது. ஹிந்து மதத்தில் இப்போது படிந்துள்ள மாசுகளான தீண்டாமை, ஜாதி உயர்வு தாழ்வு, மற்றும் பல தீய வழக்கங்கள் முதலியன ஒழிந்து விட்ட பிறகு தான் எல்லாரும் பூணூல் அணியலாம் என்பது என் கருத்து. ஆதலின் பூணூல் அணியும் விஷயத்தில் எனக்கு ஆத்திரம் அதிகம் ஏற்படுகின்றது. ஆனால் சிகை விஷயமாகத் தாங்கள் கூறியதைக் கவனிக்க வேண்டியதுதான். ... கொண்டிருந்தேன். அவமானம் ... மென்று தப்பாக நினைத்து அதை எடுத்து விட்டேன். அதை மறுபடியும் வளர்ப்பதாக யோசித்துள்ளேன். இது விஷயமாக என் நண்பர்களுடன் யோசிக்க வேண்டும்" என்றேன்.

பூணூல் விஷயமாக நான் கூறியதை சுவாமிகள் திருப்தியுடன் ஏற்றுக் கொள்ளவில்லை. எதனால் அதை அணியலாகாதென்று கூறினேனோ அதனாலேயே அணியலாமென்று கூறியதாக அவருக்குப் புலப்பட்டது. பூணூல் அணியும் விஷயத்தில் இன்றளவும் என் அபிப்பிராயம் ஹிரிஷிகேசத்தில் இருந்த மாதிரியே இருக்கின்றது. பல வித மதங்கள் உலகத்தில் இருக்குமளவும் ஒவ்வொரு மதத்தினரும் சில புறச்சின்னங்களை அணிவது நியாயமானதேயாகும். ஆனால் அச்சின்னங்கள் வெறும் வேஷமாகவும், மற்றவர்களைவிட உயர்ந்தவர்களென்று பாவித்துக் கொள்வதற்குப் பயன்படக் கூடியதாகவும் இருக்குமாயின் அதை ஒழித்து விடுவதே நலம். ஹிந்து மதத்தின் முன்னேற்றத்துக்கு பூணூல் அவசியமான சாதனமென்று எனக்குத் தோன்றவில்லை. ஆதலின் அதைப்பற்றி மிக்க சிரத்தையுடன் இருக்கிறேன். ஆனால் சிகை விஷயத்தில் நான் கொண்ட அபிப்பிராயம் தவறு என்று தோன்றியபடியால் இப்போது வளர்த்து வருவதென்று தீர்மானித்துவிட்டேன்.

## இயற்கை அழகின் சிறப்பு.

லக்ஷ்மண ஜூலா பாலத்துக்குப் போய்ச் சேர்ந்ததும் அங்குள்ள இயற்கை யழகுகளைக் கண்டு களிப்புற்றதுடன், ஆன்றோர்கள் இயற்கை யழகுடன் மதத்தின் முக்கிய தன்மையைப் புகுத்தி தீர்க்க தரிசனத்துடன் இயற்கை யழகை உணர்ந்து கொண்டவர்களா யிருந்தால் அவர்களுக்கு என் வணக்கம் செலுத்தினேன்.

ஆனால் இந்த அழகான இடங்களை மனிதர்கள் பயன் படுத்திக் கொண்ட விதத்தைப் பார்க்கும்போது எனக்கு ஆத்திரம் பொங்கிவிட்டது. ஹரித் துவாரத்திலும், ஹிரிஷிகேசத்திலும் ஜனங்கள் ரஸ்தாக்களையும் கங்கையின் இருகரைகளையும் அசுத்தப்படுத்தியிருந்தார்கள். அவர்கள் புண்ணிய நதியான கங்கையின் நீரையும் அசுத்தப்படுத்தச் சிறிதும் பின் தாங்கவில்லை. ஜனங்கள் ரஸ்தாக்களிலும், நதிக் கரையிலும் மல ஜலங்களைக் கழிப்பதைக் கண்டு வருத்தப்பட்டேன்.

லக்ஷ்மண ஜூலா என்பது கங்கை நதியின் மீது இரும்பினால் அமைக்கப்பட்ட ஒரு தொங்கும் பாலமாகும். முற்காலத்தில் அந்த இடத்தில் கயிற்றினலான பாலமொன்று இருந்ததாகக் கேள்விப்பட்டேன். ஆனால் ஒரு மார்வாடி அதை அழித்துவிட்டு இரும்புப் பாலத்தைக் கட்டினாராம். ஆனால் அதன் சாவியைச் சர்க்காரிடம் ஒப்பித்து விட்டாராம். கயிற்றுப் பாலத்தைப் பற்றி நான் ஒன்றும் கூறத் தயாராக இல்லை. ஆனால் இரும்புப் பாலம் மட்டும் அதன் இயற்கை அழகைக் குறைக்கிறது என்பது தான் என் அபிப்பிராயம். அக்காலத்தில் நான் ராஜ பக்தியுடையவனாயிருந்தும் இந்த யாத்திரை ஸ்தலத்தின் சாவியைச் சர்க்கார் பொறுப்பில் விட்டு வைத்தது எனக்குப் பிடிக்கவில்லை.

பாலத்தைக் கடந்து சென்றதும் நாம் போய்ச் சேரக்கூடிய சுவர்க்காசிரமம் மிக்க ஆபாசமானதொரு இடமாகும். நிறைய தகரக் கொட்டகைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் சாதகர்களுக்காக அமைக்கப்பட்டதென்று கூறிய போதிலும் அச்சமயத்தில் அங்கு யாரும் இருக்கவில்லை. சில முக்கிய கொட்டகைகளில் இருந்தவர்களைப் பார்த்ததில் கெட்ட எண்ணம் உதித்ததேயன்றி வேறொன்றுமில்லை.

ஆனால் ஹரித்துவாரத்தில் நான் அடைந்த அனுபவங்கள் நன்கு மதிக்கத் தக்கவை. நான் எப்படி என் வாழ்க்கையைச் செப்பஞ் செய்து கொள்ள வேண்டுமென்பதில் அவ்வனுபவங்கள் மிக்க உதவி புரிந்தன ...

## சமூக ஊழிய சபை,

## காயாமொழி.

ஷை சபையின் ஆதரவில் நாளது வைகாசி மீ 18உ (31-5-28) ஸ்ரீமான் கார்த்திகேய ஆதித்தநாடார் அவர்களின் தலைமையின் கீழ் கூடிய கூட்டத்திற் கீழ்கண்ட தீர்மானம் ஏக மனதாய் நிறைவேற்றப்பட்டது.

### தீர்மானம்.

(அ) இட்டமொழி ஏ. வி. ஜோசப் ஹைஸ்கூலை தக்ஷண நாடார் மகமைப் பரிபாலன சங்கத்திற்கு வாங்கி அதன் ஆதரவில் வைத்து நடத்துவதாகவிருந்தால் ஷை ஹைஸ்கூலை 'தக்ஷணநாடார் ஹைஸ்கூல்' என்ற பெயரால் மாற்றி ஷை சங்கத்தின் பேருக்கு வாங்கும்படியாக இந்தச் சபையானது தக்ஷண நாடார் மகமைப் பரிபாலன சங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறது.

(ஆ) இட்டமொழி ஹைஸ்கூலானது ஆதியில் ஸ்ரீமான் ஏ. வி. ஜோசப் நாடார் அவர்களினாலேயே ஆரம்பிக்கப் பட்டதால் ஷை ஹைஸ்கூலிலுள்ள சில முக்கிய கட்டடங்களுக்கு அவருடைய பெயரைக் கொடுத்து அன்னாருடைய உருவப்படமொன்றை ஆங்கு திறந்து வைப்பது நலமென்று இச்சபையானது அபிப்பிராயப்படுகிறது.

ஷை சபையின் மற்றொரு கூட்டமானது, நாளது வைகாசி மீ 22உ (5-6-28) யன்று ஸ்ரீமான் எஸ். சிவசுப்பிரமணியநாடார் பி. ஏ. அவர்களின் தலைமையின் கீழ் கூடிற்று. அவ்வமயம் ஸ்ரீ விசுவம்பர ஆதித்தர் "அன்பு" என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசினர். மற்ற அங்கத்தினரில் பலர் பேசிய பின்னர் சபை இனிது கலைந்தது.

ஏ. ஸி. ஆதித்தநாடார்,

காரியதரிசி.

## மதிப்புரைகள்.

### "கலியுக நண்பன்"

இப்பெயர் புனைந்த பத்திரிகையின் முதற் சஞ்சிகை யொன்று எமது பார்வைக்கு வந்தது. இது மலாய் நாட்டு ஈப்போ நகரினின்றும் வெளிவந்திருக்கின்றது. இதன் ஆசிரியர், ஸ்ரீமான் வீ. கோவிந்தசாமி என்பவராவர். இது மாதமொருமுறை வெள்ளி வெளியீடாகிறது. மக்களின் ஆசார சீர்திருத்தமும், தேச முன்னேற்றமும் இதன் குறிக்கோளாகும். பத்திரிகை குறைவுற்ற மலாய் நாட்டில் இது தோன்றியிருப்பது மலாய் நாட்டினர்க்கு ஓர் நல் விளைவேயாகும். பக்கங்கள் 4 கொண்டன. வருடச் சந்தா ஷி 2. வேண்டுவோர் "பத்திராதிபர், "கலியுக நண்பன்", 87. பெல்பீல்டு தெரு, ஈப்போ, எப். எம். எஸ்." என்ற விலாசத்திற் கெழுதிப் பெறவும்.

### "தொழிலாளி"

இந்நாமங் கொண்ட பத்திரிகைப் பிரதி யொன்று எமது பார்வைக்குக் கிடைக்கப்பெற்றோம். இது திருச்சினாப்பள்ளியினின்றும் ஸ்ரீமான் டி. கிருஷ்ணசாமிபிள்ளையவர்களின் பத்திராதி பத்தியத்தின் கீழ் வெள்ளிதோறும் வெளிவந்துவுகிறது. இதுதன் பெயருக்கேற்பத் தொழிலாளர் நிலையாய் நின்று அவர் துயர் களைவதில் பேருழியம் செய்து வருவதாயிருக்கிறது. தொழிலாளர் தோழமை பூண்ட இப்பத்திரிகையை தொழிலாளர் ஒவ்வொருவரும் ஆதரித்து வரக் கடப்பட்டுளார். 'தொழிலாளரின்றேல் உலகமில்லை' என்பது இதன் சித்தாந்தம். பக்கங்கள் 16 கொண்டன. வருடச் சந்தா உள்நாட்டுக்கு ரூ 3-0-0-ம், வெளி நாட்டுக்கு ரூ 4-0-0 மாகும். தேவையுள்ளோர் "மானேஜர், "தொழிலாளி" ஆபீஸ், 119. பெரியகடை வீதி, திருச்சினாப்பள்ளி" என்ற விலாசத்திற் கெழுதிப் பெறவும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நாடார் மகாஜன சங்கம்

## 12-வது மகா நாடு

## அருப்புக்கோட்டை.



1928 வருஷ ஜூலை மீ 4, 5, 6 உ களுக்கு விபவ வருஷ ஆனி மீ 21, 22, 23 உ களில்
இதற்கென விசித்திரமா யமைத்திருக்கும்
"பாண்டிய விலாஸ்" கொட்டகையில் நடைபெறும்.
குமாரமங்கலம் ஜமீன்தாரும், சென்னை கவர்ன்மெண்ட் முதல் மந்திரியுமான கனம். டாக்டர்.
**P. சுப்பராயன் M.A., B.C.L., L.L.D. அவர்கள்**
மகாநாட்டைத் திறந்து வைப்பார்கள்.
பொறையார், ஸ்ரீமான் வெ. கனகசபை நாடார் அவர்கள்—
பிரஸிடெண்ட்.


(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

...இருர்கள். அவையெல்லாம் வீணான செலவின் அறிகுறிகளேயாகும். இவை மனித சமூகத்திற்குப் பொது வான கஷ்டத்தைத் தருவனவாகும். மனிதன் நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைக்கிறான். எனினும், மனித வாழ்வை [illegible] அல்லது ஐசுவரிய வாழ்வை வளர்க்கும் பயன் அதில் விளையவில்லை. வீண் தொழிலைப் புரிந்து உண்மையில் வாழ்வுக்குத் தேவையான விளைவுகளைத் தோற்றிய மனிதர்களது உழைப்பின் பலனில், இவர்கள் பங்குபெறுகின்றனர். எனவே, இவர்களால் பிறர் வாழ்வில் மனிதனது செயலாற்றலில், ஓரளவு வியர்த்தமாகத் தொலைந்து நாசமாகிறது. எனவே, இதனால் ஒரு புறத்தில் ஒரு விதத்தில் பண நெருக்கடி உண்டாகி விடுகின்றது.

வாழ்வுக்குத் தேவையற்ற வீணான போகங்களைச் சிலர் அனுபவிக்கிறார்கள். இதனால் மனிதனது செயலாற்றலின் விளைவில் ஒரு பகுதி அவசியமின்றி நாசமாகின்றது. அது பொதுவாகப் பிறர் வாழ்வையேதான் தாக்கும். பிறர் வாழ்வின் பொதுச் சேதமும், கஷ்டமும் தனி நபர்களின் வாழ்வையுந்தான் பாதிக்கும். எனவே, பணத் தொல்லையும் துன்பமும் வந்து சேர்கின்றன. அன்றியும், அநாவசிய போகங்களை அனுபவிக்கும் மனிதர்கள், அதனால் தேகசுகத்தையும் பாதிக்கப் பெறுவார்கள். அநாவசிய போகம் என்பதற்கு எல்லையுண்டா? தனக்கு [illegible] விரும்பினாலும், அவசியத் [illegible] செலவுக்குத்தான் எல்லையுண்டு. அதனை மீறிவிட்டால், அதற்கு ஓர் வரையறையில்லாது போய் விடும். கண் மூடித்தனமான செலவாலோ துன்பமே உண்டாகும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

பிறர் உழைப்பின் விளைவை, நெஞ்சில் யோசனையும் அச்சமும் இன்றிக் கொள்ளையிட்டுண்ணுவோர் இருக்கிறார்கள். இது அவர்கள் உள்ளத்திற்கே புலப்படுவதில்லை. பணத்தைப் பற்றி ஒரு குறை கூறுவதுண்டு. செல்வம் ஒரேவிடத்திலே குவிந்து செல்வதால், பல தீமைகள் உண்டாகின்றன என அறிவாளிகள் உரைக்கின்றார்கள். செல்வம் எப்படித் திரண்டாலென்ன? மனிதர்களிடம் அறச் சிந்தனையும் அன்பு உள்ளமும் பருத்து விட்டால் செல்வத் திரட்சியால் யாதும் தீங்கு உண்டாய்விடாது. அதற்குப்பதிலாக அதனால் நன்மையுங் கூட விளையும். கட்டுப்பாடும், பலருக்கும் உண்டியளிக்கும் ஸ்தாபனங்களும் பணத்திரட்சியால்தான் உருவிப்பது எளிதாகும். ஆனால் அந்த முறையில் அதனைப் பயன் படுத்தாமல், முடிந்த இன்பங்களை யெல்லாம் அனுபவிக்கச் சில மனிதர் மட்டில் முயலும்பொழுது தான் கலகங்களில் முரண்கள் எழுந்து விடுகின்றன. இதனால் பரஸ்பரம் நெருக்கடியும் கஷ்டமும் ஏற்பட்டுவிடுகின்றன. சுருங்க உரைக்கப்போனால், சமூக வாழ்விலும், அவ்வாறே தனிவாழ்விலும் உழைப்பின் விளைவான வரவை யொட்டிச் செலவு செய்யப்பெற்று, யாவராலும் உழைப்பில் பங்கெடுத்துக் கொள்ளப் பெற்று, செட்டு வாழ்வு நடைபெறின் பணமுடையும் தட்டும் ஏற்படா என்று கூறிவிடலாம்.

## உடம்பெல்லாம் பாம்புகள்.

சுமார் 17-வயதுள்ள பச்சலி கொயின்கார் மகராஜ் என்பவர் சுமார் 8 வருஷங்களுக்கு மேலாக உலக வாழ்க்கையை வெறுத்து ஒரு கந்தைத் துணியை மட்டும் இடுப்பில் சுற்றிக்கொண்டு தம்மிஷ்டம்போல் இருந்து வருகிறார். அவருடைய கழுத்து இடுப்பு முதலியவை சுற்றிலும் பல பாம்புகள் சுற்றிக்கொண்டு இரவும் பகலும் எப்போதும் இருந்து வருகின்றன. அவர் அவைகளுடன் அளவற்ற ஆனந்தத்துடன் இருந்து வருகிறார். அப்பாம்புகளை எவ்வளவு தொந்தரவு செய்து கோபமூட்டிய போதிலும் அவைகள் கெடுதல் செய்ய சக்தியற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அம்மகாராஜா தானாகவே தீயை ஏற்படுத்தி அந்நெருப்பில் நடந்து செல்வதைக்கண்டு பலர் அவருடைய அபூர்வ சக்தியைப் பற்றிக் கொண்டாடுகின்றனர்.

## கிளிகளின் பள்ளிக்கூடம்.

அமெரிக்க ஐக்கிய இராஜ்யத்தில் பிரௌன்ஸ்வில்லி என்னுமிடத்தில் மிஸ்டர். கிங் என்பார் கிளிப்பிள்ளைப் பள்ளிக்கூடம் ஒன்று நடத்துகிறார். இப்பள்ளிக்கூடத்தில் 1500 கிளிப்பிள்ளைகள் படிக்கின்றன. மெக்ஸிகோவிலிருந்தும், தென்னமெரிக்காவிலிருந்தும் இக்கிளிகள் கொண்டு வரப்படுகின்றன. அவற்றிற்கு ஆங்கில பாஷை கற்றுக் கொடுக்கப்படும். பாடம் நடத்து[illegible] [illegible] கப்பட்டிருக்கும் ஊஞ்சல்களில் உட்காருகின்றன. ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு கிராமபோன் இருக்கிறது. கிராமபோன் பற்பல வாக்கியங்களைக் கூறக் கிளிகளும் கூடச் சொல்கின்றன. ஒவ்வொரு வாரமும் பரீட்சை நடத்தப்படுகிறது. பரீட்சையில் தவறும் கிளிகளுக்குத் தனி வகுப்பு நடத்தப்படுகிறது. ஆறுவாரத்திற்குள் ஒரு கிளி குறிப்பிட்ட அளவு பேச்சுகள் கற்றுக் கொள்ளாவிடில் அது படிக்கத் தகுதியற்றதென்று பள்ளிக்கூடத்திலிருந்து தள்ளப்படுகிறது.

## தாயை மணந்த வெள்ளையர்.

அமெரிக்காவில் பிராண்டன் என்ற இடத்தில் 31-வயதுள்ள சார்லஸ் ஆரே என்ற வெள்ளையர் தனது மாற்றாந் தாயை மணந்து கொண்டார். அம்மாது அவரைவிட 13-வயது மூத்தவள். பள்ளிக்கூட உபாத்தியாயராகிய அவருடைய தந்தை, அம்மாதை இரண்டாந் தாரமாக மணந்து கொண்டார். தந்தை இரண்டு வருஷங்களுக்கு முன்பு இறந்து விடவே, மகன் அவளை ஆடம்பர வைபவத்திற்கிடையே மணந்து கொண்டான். பாதிரிகளும் மணச் சடங்கை சிறப்புற நடத்திவைத்தனர்.

வீரம் வாய்ந்த ஆண்மக்களைப்பெற்ற வீரத் தாய்மார்கள் என்ற பெயர் ஏற்பட்டு விட்டால் இந்தியாவின் புராதன [illegible] [illegible] நாட்டப்படும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection